உ

சிவமயம்




# கந்தபுராணச் சிந்தனைகள்

ஆக்கியோன்

மட்டுவில் - ஆ.நடராசா

உ

சிவமயம்



# கந்தபுராணச் சிந்தனைகள்

26.05.1996

| | |
|---|---|
| நூல் | : கந்தபுராணச் சிந்தனைகள் |
| ஆக்கியோன் | : மட்டுவில்-ஆ.நடராசா |
| முதற்பதிப்பு | : 1996 |
| வெளியிடப்பட்ட திகதி | : 26.05.1996 |
| பிரதிகள் | : 1000 |
| விலை | : ரூபா 45/= |

| | |
|---|---|
| அச்சுப்பதிப்பு | : லக்ஷ்மி அச்சகம் |
| | 195, ஆட்டுப்பட்டித் தெரு, |
| | கொழும்பு-13. |

உ

சிவமயம்

# முன்னுரை

இந்நூற்றாண்டின் முற்பகுதிவரை சைவாலயங்களிலும், மடங்களிலும், சைவாசாரமுடையவர்களது இல்லங்களிலும் கந்தபுராணத்தைப் படித்துப் பயன் சொல்லி வந்தார்கள். அதைப் பொருளுணர்ந்து கேட்டவர்கள் ஆசார சீலராய் வாழ்ந்தனர். அதனாற் சிவநெறி தழைத் தோங்கியது.

இப்பொழுது இப்புராணத்தை மடங்களிலும், வீடுகளிலும் படித்துப் பொருள் சொல்லும் வழக்கம் ஒழிந்துவிட்டது. சில ஆலயங்களில் மாத்திரம் கந்தபுராணம் படிக்கிறார்கள். அவ்விடங்களிலும் படிப்போரையும், பயன்சொல்வோரையும் காணலாமே யன்றி, கேட்போரைக் காணலரிது.

இவ்வாறு சிவகதை படிப்போரும் கேட்போரும் இல்லையாகி, சிறுகதையும் நாவலும் படிப்போர் தொகை அதிகரித்து வருகிறது. இதற்குரிய காரணங்களிலொன்று, சிறுகதையும் நாவலும் சில மணித்துளிகளில் அல்லது சில மணித்தியாலங்களிற் படித்து முடிக்கத் தக்கனவாயிருக்கும் போது கந்த புராணத்தைப் படிப்பதற்குப் பலநாட்கள் தேவைப்படுவதாயிருக்கலாம்.

அதனால், கந்தபுராணத்திற் கூறப்படும் சில கருத்துக்களை, சில மணித்துளிகளிற் படிக்கக் கூடிய கட்டுரைகளாக எழுதி, அவற்றைத் தொகுத்து, ‘கந்தபுராணச் சிந்தனைகள்’ என்னும் இந்நூலை வெளியிடுகின்றேன்.

கந்தபுராணத்திற் கூறப்படும் சிந்தனைக்குரிய கருத்துக்கள் ஏராளம். அவற்றையெல்லாம் தொகுத்தளிக்கும் ஆற்றல் எனக்கில்லை.

விநாயக, வயிரவ, வீரபத்திர, சுப்பிரமணியக் கடவுளரின் தோற்றம் பற்றிக் கந்தபுராணத்திற் கூறப்பட்டிருக்கிறது. இவற்றைச் சைவசமயிகள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

தக்கன் சிவனை இழித்துக் கூறிய கூற்றுக்களையும், அவற்றுக்கெல்லாம் ததீசி முனிவரளித்த ஆணித்தரமான பதில்களையும் நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டும்.

கந்தவிரதப்படலம் கந்தபுராணத்துக்கு ஒரு பின்னிணைப்புப் போன்றது. கந்தவிரதம் அனுட்டிப்போர் ஒவ்வொருவரும் அதைக் கற்றறிவது நல்லது.

கயமுகனுற்பத்திப் படலம், அனந்தன் சாபநீங்கு படலம் என்னும் இரண்டும் விநாயக விரத காலத்திற் படிப்பதற்கும், அடிமுடிதேடு படலம் சிவராத்திரி தினத்திற் படிப்பதற்கும் ஏற்றவை.

இவற்றைத் தனித்தனி நூல்களாக வெளியிடுவது சைவசமயத்திற்குச் செய்யும் அரும் பெரும் தொண்டாக அமையும். இத்தொண்டைச் செய்வதற்கு வல்லவர்களுக்கும் நல்லவர்களுக்கும் முருகன் திருவருள் துணைபுரிவதாக.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி[J.P] அவர்களுக்கும் இந்நூலை அழகாக அச்சிட்ட லக்ஷ்மி அச்சகத்தாருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

'ஏரகம்'  
மட்டுவில் வடக்கு,  
சாவகச்சேரி.  
26.05.1996

ஆ. நடராசா

## துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்  
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்  
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்  
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித்தோது வோரே.

கந்தபுராணம் எமது சொந்தப் புராணம் என்று பேசிப் பேசி மகிழ்வது யாழ்ப்பாணச் சைவமக்களின் மரபு வழி இடம்பெற்றுவரும் நிகழ்வாகும். இந்நாட்டுத் திருக்கோயில்கள் தோறும் தவறாது கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கமும் இன்றுவரை பேணப்பட்டு வருகிறது.

கந்தபுராணத்தை இறைவனுடைய நெற்றிக் கண்ணோடு ஒப்பிட்டுக் கூறுவர். முருகப்பெருமான் இறைவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவர் ஆவர். எனவே முருகனுடைய அருட்புகழைக் கூறும் கந்தபுராணம் அக்கினிக்கு இயைந்ததாக விளங்குவது பொருத்தமாகும். தமிழில் எழுந்த முப்பெரும் புராணங்களாகிய பெரியபுராணம் சூரியனாக விளங்கும் இறைவனது வலக்கண்ணுக்கு ஒப்பாகப் பேசப்படுகிறது. திருவிளையாடற் புராணம் சந்திரனாக விளங்கும் இறைவனது இடக்கண்ணோடு இணைத்துப் பேசப்படுகிறது. ஆனால் நெற்றிக் கண் அக்கினிப் பிழம்பாகும். அதனை நிகர்த்ததாக கந்தபுராணம் விளங்கி அனைத்துச் சீவராசிகளுக்கும் தேவையானவற்றை வழங்கும் பெற்றித் தாயது.

கந்தபுராணம் சொல்லும் உயிரோட்டமான கருத்து பிறர் செய்த நன்றியை மறக்கக்கூடாது என்பதாகும். தவவலிமையில் மேம்பட்ட தக்கனும் சூரபன்மனும் நன்றி மறந்த குற்றத்துக்கு உள்ளானார்கள். அதனால் பெருந்துன்ப மடைந்தார்கள். தேவர்களின் வீழ்ச்சிக்கும் இதுவே காரணமாக அமைந்தது. கந்தபுராணம் கூறும் உயர்ந்த தத்துவம் இதுவாகும்.

மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் கந்தபுராணத்தைத் துறைபோகக் கற்றவர். கற்றதைச் சிந்தித்துத் தெளிந்தவர். இதனாலே கந்தபுராணச் சிந்தனை என்ற தொகுப்பு நூலை வெளியிட முன்வந்துள்ளார். தவத்தின் பெருமையை முதலாக வைத்து, திருக்கைவேலின் மகிமையை இறுதியாக வைத்துச் சிந்தனைக்குரிய கட்டுரைகளாக ஆக்கியுள்ளார். இப்பெரியாருடைய முருகபக்தியும் கந்தபுராண ஈடுபாடும் மிகவும் பாராட்டுக்குரியவை. இந்நூலின் பயனுணர்ந்து அனைவரும் வாங்கிக் கற்று உய்வடைய வேண்டுமென்று வாழ்த்துரை வழங்குகிறோம்.

*தங்கம்மா அப்பாக்குட்டி,*

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி [J.P]

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை.



# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. தவத்தின் பெருமை | 1 |
| 2. தவஞ்செய்த சூரபன்மன் | 3 |
| 3. சந்திரசாபம் | 8 |
| 4. தக்கயாகம் | 11 |
| 5. சிவன்யோகத்தில் இருந்தார் | 13 |
| 6. திருக்கயிலாயத்திற் சூது | 15 |
| 7. அகந்தை கொண்ட வீரவாகு | 18 |
| 8. அன்புசெய்த அகத்தியர் | 20 |
| 9. பிரமோப தேசம் | 27 |
| 10. திருக்கைவேல் | 32 |

# தவத்தின் பெருமை

சூரபன்மனுக்குத் தந்தை காசிபமுனிவர், தாய் மாயை. தருமம் என்றொரு பொருளுளது எனத் தன் மகனுக்கு உபதேசஞ் செய்த காசிபர் "தருமத்தால் அன்பும் அன்பினால் அருளும் உண்டாகும். அருளால் தவம் கைகூடும். தவத்தினால் அறிவு தெளியும். அறிவு தெளியச் சீவன் சிவனை அடையும்" என்றார்.

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்தும் மேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்"

*(காசிபனுபதேசப்படலம் 13)*

தந்தை மகனுக்குப் படிப்பித்த பாடத்தைக் கேட்டுத் தாய் சிரித்தாள். "முனிவரே வீட்டை அடைய விரும்புபவர்களுக்கே உமது உபதேசந் தகும். எமது பிள்ளைகளுக்கு வீடுபேறு வேண்டாம். அவர்கள் வீரம், செல்வம், புகழ், அழியா ஆயுள் முதலியவற்றைப் பெற்று வாழவேண்டும்" என்று கூறினாள்.

பின்பு தாய் மகனை நோக்கி, "மகனே! நீ பெருஞ் செல்வத்தையும் தலைமையையும் பெறவேண்டும். அவற்றைப் பெறுவதற்காக வேள்வி செய்" என்று கூறி, அவனைத் தவஞ் செய்ய அனுப்பினாள். சூரபன்மன் தவஞ் செய்யச் சென்றான். செல்லும் வழியில் அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் அவனைச் சந்தித்தார். அவர் சூரபன்மனை வாழ்த்தி,

"பொய் கொலை களவு காமம்
புன்மைக ளுறாமே போற்றிச்
செய்குதி தவத்தை என்னாச்
செவியறி வுறுத்தல் செய்தான்"

*(அசுரயாகப் படலம் 33)*

சூரபன்மன் பதினாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தும் அவனுக்குச் சிவதரிசனங் கிடைக்கவில்லை. அவன் ஆகாயத்தை அடைந்தான். அங்கிருந்து அரிந்த தன் தசைகளையுஞ் செங்குருதி யையும் ஓம குண்டத்திற் சொரிந்தான். அப்போதும் சிவபெருமான் அவனுக்குக் காட்சி கொடுக்கவில்லை. இறுதியில், ஓம குண்டத்தில் நிறுத்தப்பட்டிருந்த அக்கினி மயமான வச்சிர தம்பத்திற் பாய்ந்து சாம்ப ரானான்.



சிவபெருமன் சூரனுக்கு அருள் புரிந்தார். அவன் சிவனருளால் உயிர்பெற்றெழுந்தான். தனக்குக் காட்சி கொடுத்த சிவனிடமிருந்து ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாளும் வரம் பெற்றான்.

தன்மகன் வீடுபெறவேண்டுமென விரும்பிய காசிபர் சூரபன் மனுக்குத் தவத்தின் சிறப்பையும், அதன் அடித்தளமாகிய தருமத்தையும் உபதேசித்தார்.

காசிபர் உபதேசத்தை வெறுத்து தன்மகன் பேரரசனாக வேண்டுமென விரும்பிய மாயையும், அப்பேற்றை அடைவதற்காகச் சிவனை நோக்கித் தவஞ்செய்யும் படியே தன் மகனுக்குக் கூறினாள். காசிப முனிவர் கூற்றாகவும் மயக்கஞ் செய்யும் மாயையின் கூற்றாகவும் தவத்தின் பெருமையைக் கூறி, அதைச் செய்ய வேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது கந்தபுராணம்.

தவத்தின் வலிமையால் உமையை மகளாகப் பெற்றதுடன் அரச போகத்தையும் பெற்ற தக்கன் செய்த சிவநிந்தனையாகிய யாக சங்காரத்தின்போது அவனுஞ் சங்காரஞ் செய்யப்பட்டதையும், வீரபத்திரக்கடவுளின் அருளால் உயிர்பெற்றெழுந்த அவன் மீண்டுந் தவஞ்செய்து அந்தமில் இன்பத் தழிவில் வீடு பெற்றதையும் எடுத்துக்காட்டி, வீடுபேறே தவத்தினாற் பெறத்தக்க பெரும் பேறென்பதை விளக்குகின்றது கந்தபுராணம்.

சத்திநிபாதர்களாகிய சமயிகளுக்கு வீட்டையும் உலகர்க்கு அவர் வேண்டும் போகங்களையும் தரவல்லது தவம்.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்" என்கிறது குறள்.

# தவஞ்செய்த சூரபன்மன்

தவஞ்செய்து ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆட்சிபுரிய வரம்பெற்ற சூரபன்மன் தந்தை காசிபரை அடைந்து, அவரை வணங்கி தான் என்ன செய்யவேண்டுமென வினவினான். தந்தை தன்மகனை அவனுக்கேற்ற பாடம் படிப்பிக்கக்கூடிய ஆசிரியரிடந் தானே அனுப்ப வேண்டும். காசிபர் சூரபன்மனைச் சுக்கிராச்சாரி யாரிடஞ் செல்லும்படி கூறினார்.

சூரன் சுக்கிரனிடஞ் சென்றான். பாடம் ஆரம்பமானது. பதி, பசு, பாசம் என முப்பொருள் உண்டென்பது தவறு. பாவபுண்ணியம், மறுபிறப்பு, முத்தி என்பதெல்லாம் பொய். நீயே பிரமம் என மாயாவாத பாடம் நடைபெற்றது.

அடுத்த பாடம் ஆரம்பமானது "பிரமமாகிய உன்னைக் கேட்க யார் இருக்கிறார்கள்? கொலை, களவு, காமம், வஞ்சனை முதலிய அனைத்தையும் நீ செய். அதனால் உனக்குத் தீங்கு வருமென்பது பொய். இவற்றைச் செய்யாவிட்டால், நீ விரும்பிய அனைத்தையும் பெற முடியாது. உனக்கு எவரும் அஞ்சார்" என உலோகாயதம் உபதேசிக்கப்பட்டது.

"கொலையொடு களவு காமம்
குறித்திடு வஞ்ச மெல்லாம்
நிலையெனப் புரிதியற்றால்
நினக்குமேல் வருந்தீ தொன்றும்
இலையவை செய்தி டாயேல்
இறைவநீ விரும்பிற் றெல்லாம்
உலகிடை ஒருங்கு நன்னா......"

*(சுக்கிரன் உபதேசப்படலம் 50)*

சுக்கிரனிடம் உபதேசம் பெற்ற சூரபன்மன் திக்கு விசயஞ் செய்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களும் அவனது ஆட்சிக் குட்பட்டன. அவனது ஆட்சியில் அமரர் தாம் செய்த பாவத்தின் பயனை அநுபவித்தனர்.

அரசியல் பிழைத்தவனுக்கு அறங் கூற்றாக மாறியது. சூரபன்மன் தன் படையையுஞ் சுற்றத்தையும் இழந்து, யுத்த களத்தில் தன்னந் தனியனாக நின்றான். அவன் முருகனின் சேவலும் மயிலுமாக வேண்டுமென வேண்டி முற்பிறப்பிற் செய்ததவம் பயனளிக்குங் காலம் வந்தது. முருகப்பெருமான் தனது விசுவ ரூபத்தைக் காட்டி, அதைக்



காண்பதற்குரிய ஞானக்கண்ணையும் அவனுக்கு அருளினார்.

சூரபன்மன் விசுவ ரூபத்தைக் கண்டான். முருகப்பெருமான் அவனுக்குச் சிறிது நல்லுணர்வு நல்கினார். அவனது சினந் தணிந்தது, மெய்ம்மயிர் பொடித்தது, கண்ணீர் பெருகியது, என்பும் உருகி அன்பு கசிந்தது.

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாட் பரிசிவை உணந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தி அன்றோ"

*(சூ.வ.ப 433)*

என எண்ணினான்.(மஞ்ஞை - மயில் அயன் - பிரமா)

சிறிது நேரத்தில் எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற பேரெழிலில் ஈடுபட்ட அவனது சிந்தனை கலைந்தது.

முருகனுக்கு ஆளாகி வாழவேண்டுமென எண்ணிய எண்ணத்தை மானந் தடுத்தது. அவன் மீண்டும் போரிட்டான்; சரணாகதி யடையவில்லை; இறுதிவரை உறுதியோடு போர் புரிந்தான். வேற்படை அவனது மார்பைப் பிளந்தது. பிளவுண்ட இரு கூறுகளும் சேவலும் மயிலுமாகி முருகன் திருமுன் சென்றன. முருகப்பெருமான் அருள் நோக்கஞ் செய்தார். மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றுக்கொண்டார்.

"தீயவை புரிந்தா ரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்"

*(சூரபன்மன்வதைப்படலம் 496)*

என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

இப்பாடலில் வரும் "குமரவேள் திருமுன் உற்றால்" என்னுஞ் சொற்றொடரில் இடம்பெறும் "உற்றால்" என்னுஞ் சொல், "அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா" என்னுஞ் சொற்றொடரில் இடம்பெறும், முளைத்தால் என்னுஞ் சொல் தருவது போன்ற பொருள் தருகின்றது. உற்றால், முளைத்தால் என்னும் சொற்களின் இறுதியில் இடம்பெறும் 'ஆல்' செயல் நிகழ்ச்சியின் அருமையை உணர்த்துகின்றது.

அத்தை சித்தப்பாவாக மாறுவதானால் அத்தை ஆணாக மாறவேண்டும். அவளுக்கு மீசை முளைக்கவேண்டும். மீசை முளைத்த

அத்தையைச் சித்தப்பா என அழைப்பதற்கு அவளுடைய அண்ணனுக்குப் பிள்ளை இருக்கவேண்டும். அண்ணனுக்குப் பிள்ளை இருந்தாலும் அப்பிள்ளை, அவளை முன்னர் அழைத்தது போலன்றிச் சித்தப்பாவென அழைக்கவேண்டும். இத்தகையதொரு நிகழ்ச்சி இதுவரை நிகழ்ந்ததில்லை. இவ்வாறு நிகழ்ந்தால் அது ஆச்சரியப்படக்கூடியதொரு நிகழ்ச்சியாகவேயிருக்கும்.

அதுபோல, "குமரவேள் திருமுன் உற்றால்" என்பதில் வரும் உற்றால் என்னுஞ் சொல்லும் தீயவை புரிந்தோர் முருகன் திருமுன் புறுதல் அரிதென்பதையே உணர்த்துகின்றது.

தீயவை புரிந்தோர் முருகன் திருமுன்படைய முடியாதென்பதை முதலடியில் எடுத்துக்காட்டி, நல்லன செய்யும்படி சொல்லாமற் சொல்லுங் கச்சியப்பர், அடுத்த அடியில் தூயவராகி மேலைத் தொல் கதியடைவர் எனக்கூறி, எவராவது தூயவராகாமற் கதியடைய முடியா தென்பதைத் தெளிவுபடுத்துகிறார். (தூயவராதல் – சன்மார்க்கராதல்)

மாயையின் மகனாகித் தீயவை புரிந்த சூரபன்மனைக் குமரவேள் திருமுன் செல்லவைத்து, அவன் தூயவனாகிக் கதியடைந்ததை எடுத்துக்காட்டி, இன்னும் தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலை தொல்கதியடைவரென்கை ஆயவும் வேண்டுங் கொல்லோ? எனக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் வினாவுகின்றாரெனக் கொண்டால், தீயவை புரிதல், குமரவேள் திருமுன்புறுதல், தூயவராதல், தொல்கதியடைதல் ஆகிய செயல்களெல்லாம் உயிரின் செயலாகவே கருதப்படும். முருகன் செயலற்றவனாகக் கருதப்படுவன்.

இக்கருத்தை "வெய்யிற் கொடுமையால் வருந்திய வழிப் போக்கனொருவன் ஒரு மரத்தை அடைந்து, தன் பிரயாணத்தைக் கைவிட்டு, அந்த மரநிழலில் இருந்து இன்புறுவது போல, தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவராகி மேலைத்தொல்கதி அடைவரென விளக்கமாகக் கூறாலம்.

இக்கூற்றில் இடம்பெறும் உவமான உவமேயங்கள் வருமாறு:

| *உவமானம்* | *உவமேயம்* |
|---|---|
| வழிப்போக்கன் | தீயவை புரிந்தார் |
| மரத்தை அடைதல் | குமரவேள் திருமுன்புறுதல் |
| பிரயாணத்தைக்கைவிட்டு இருத்தல் | தீயன புரிதலை விட்டுத் தூயவராதல் |
| இன்புறுதல் | தொல்கதியடைதல் |

இவ்வுவமானத்திலும் மரத்தையடைதல், இருத்தல் இன்புறுதல் முதலிய செயல்களெல்லாம் வழிபோக்கனின் செயல்களாகவே



கூறப்படுகின்றது. மரத்தின் செயலெதுவுங் கூறப்படவில்லை. மரம் செயலற்று நிற்கிறது.

அதனால், தீயவைபுரிதல், திருமுன்புறுதல், தூயவராதல், தொல்கதியடைதல் ஆகிய செயல்களைச் செய்யும் உயிரைச் சுதந்திரமுடையதாகவும் குமரவேளைச் சுதந்திரமற்றவனாகவும் கருதவேண்டியிருக்கிறது. ஈசுவர அவிகாரவாதி, அத்துவித முத்தி பற்றிக் கூறுங் கருத்து இக்கருத்தேயாகும்.

ஈசுர அவிகாரவாதி,

"...... சீர்பெறு கடவுளைச்
சலமில னாகிச் சார்ந்தவர்க் கென்றும்
நலமிக நல்கும் நாதனை யணைந்து
பூழி வெம்மை பொருந்தா துயர்ந்த
நீழல் வாழும் நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரம் களைந்திருந் திடுமே"

(சலமிலன் – விருப்புவெறுப்பற்றவன், கருவுறுதுயரம் – பிறவித்துன்பம்) எனக்கூறுவதை ;

"பாதவம் என்றும் சேதனம் இன்மையின்
இளைத்தோர் வம்மின் என்பதும் துன்பம்
விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளுற அழுங்கி
ஆற்றுதல் இன்றி ஆறியங் கினர்முன்
தோற்றிடு மென்று சொல்லவு மிலதால்
இவ்வகை கடவுட் கியம்புதல் தவறே"

எனக்கூறி மறுக்கிறது சங்கற்ப நிராகரணம்.

(பாதவம் – மரம், சேதனம் – அறிவு, பொடித்தல் – அரும்புதல் துன்பம் விளைத்தோர் – மரத்தை வெட்டித்துன்புறுத்தியோர் கொப்புள் – கொப்புளம், ஆறு – வழி)

"சென்றணையு நிழல்போலச் சிவனிற்ப னென்னிற்
சென்றணையு மவன் முதலி......"

*(சித்தியார் சுபக் 11 ஆம் சூத் 2 ஆம் அதி)*

முதலி – முதல்வன், செயல் செய்வதற்குச் சுதந்திரமுடைவன். எனக்கூறி ஈசுர அவிகாரவாதி மதத்தை மறுக்கும் அருணந்தி சிவாச்சாரியார்.

"நாதனே முன்னிற்கி னணுகுவர்நற் றாளே"

*(சித்தியார் சுபக் 8 ஆம் சூத் 2 ஆம் அதி)*

எனக்கூறி, முன்னின்றருள் புரிதல் முதல்வன் செயலே என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

"தானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண்டருளும்
வான்வார்கழல்" என்கின்றது மணிவாசகம்

கச்சியப்ப சிவாச்சாரியாரும்,

"பூவுலகண்ட மெல்லாம் புரந்திடுஞ் சூரன்தன்னைத்
தீவினையாள னென்றே செப்புவர் சிறப்பின் மிக்க
மூவிருமுகத்து வள்ளல் முன்னர்வந் தெய்தப்பெற்றான்
ஆவிவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வன் அன்றோ"

*(இரண்டாம் நாள் சூரபன்மன் யுத்தப்படலம் 238)*

எனக்கூறி முன்னிற்பது முருகன் செயலே என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

அதனால் "குமரவேள் திருமுன்னுற்றால்" என்பதற்கு "முருகன் அருள் செய்யக்கருதினால்" என்றே பொருள் கொள்ளவேண்டும்.

திரு – அருள், முன்னுற்றால் – கருதினால்

காந்தத்தின் முன்னிருந்த இரும்பு, காந்தத்தை நோக்கிச் சென்ற காரணத்தால், இரும்பு காந்தத்தை நோக்கிச் சென்றதெனக் கூறலாம். ஆனாலும் காந்தம் இரும்பை இழுத்தது என்பதே உண்மையாகும். அதுபோல, வேற்படையாற் பிளக்கப்பட்ட சூரபன்மன் சேவலும் மயிலுமாகி முருகன் முன் சென்ற காரணத்தால் 'அவன் முருகன் திருமுன்னுற்றான்' எனக்கூறலாம். ஆனாலும், குமரவேள் சூரபன்மன் முன்னுற்ற காரணத்தால், சூரபன்மன் முருகன் முன் சென்றான் என்பதே உண்மையாகும்.

சூரபன்மனைத் தீவினையாளனென்று செப்பினும், குமரவேள் அவன் முன்னுற்ற காரணத்தால், அவன் செய்த அறமும் தவமும் பெரிது. அதனால், "அவன் தவம் செப்பற் பாற்றோ" என்கின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.



# சந்திரசாபம்

தக்கப் பிரசாபதி தான் பெற்ற அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும், சந்திர தேவனுக்கு மணஞ்செய்து கொடுத்து, அவர்கள் அனைவர் மீதும் சமனாக அன்பு செலுத்தும்படி அவனுக்கு அறிவுரையுங் கூறினான்.

அவர்களை அழைத்துச் சென்ற சந்திரன் ஒரு தினத்துக்கு ஒருத்தியோடு கூடி இன்புற்று வாழ்ந்தான். சந்திரனின் மனைவியரில் கார்த்திகையும், உரோகிணியும் பேரழகுடையவர்கள். காலப்போக்கில் அவர்களோடு மாத்திரங் கூடி வாழ்ந்தான் சந்திரன். மற்றைய மனைவியர் சந்திரனோடு கோபித்துக் கொண்டு சென்று தமது நிலையைத் தந்தையாகிய தக்கனுக்குத் தெரிவித்தனர்.

தக்கன் கோபங்கொண்டு, "உன் கலைகளெல்லாந் தேய்ந் தொழிக" எனச் சந்திரனுக்குச் சாபமிட்டான். சந்திரனுடைய கலைகள் நாளொன்றுக்கு ஒன்றாகத் தேய்ந்தன. பதினைந்து நாட்கள் சென்றன. சந்திரனின் ஒரு கலைமாத்திரம் எஞ்சியிருந்தது.

சந்திரன் இந்திரனிடஞ் சென்றான் "தக்கனுடைய சாபத்தால் எனது பதினைந்து கலைகளும் அழிந்து விட்டன. ஒரேயொரு கலைமாத்திரம் இருக்கிறது. இதுவும் இன்று அழியும். இதுவும் இன்று அழிந்தால், பூரணசந்திரன் என்னும் என் இயல்பு முழுவதுங் குன்றும்; பெயரும் புகழுந் தொலையும்; வசையே மிஞ்சும். இவ்வாபத்திலிருந்து தப்புவதற்கு நான் என்ன செய்யலாம்? எனக்கு எதுவும் தெரியவில்லை" என்றான்.

இந்திரன் சந்திரனைத் தழுவினான். "தோழா! அஞ்சாதே. முன்னொருநாள் கயிலாயத்தில் விநாயகப் பெருமானுடைய திருவயிற்றையும் அவர் கையிலிருக்கும் மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். அப்போது விநாயகர் "எவரும் உன்னைப் பார்க்காது, இகழ்ந்து விலகிச் செல்லும் பொருட்டு, ஒரு நீசனைப் போல இருக்கக்கடவை" எனச் சாபமிட்டார்.

அச்சாபத்தால் எல்லோரும் உன்னை இகழ்ந்து அகன்றனர். நீ நாணி வானிற் செல்லா தொழிந்தாய். பிரமன் முதலியோர் கயிலையை அடைந்து விநாயகரைப் பணிந்து "தேவரீரது மேன்மையைக் கருதாது உம்மை இகழ்ந்து சந்திரன் குற்றமுடையோன் ஆயினான், இப்போது வருந்துகின்றான். அவன் இவ்வுலகுக்கு வேண்டியவன். அதனால் ஆண்டில் ஒருநாள் தேவரீரிட்ட சாபத்தை அனுசரிக்கும் வண்ணம்

அருள்புரிந்து சந்திரனைக் காத்தருள்க" எனப் பிரார்த்தித்தார்கள். விநாயகர் அவர்கள் வேண்டிய வண்ணம் திருவருள் புரிந்தார்.

அதனால் ஆவணிமாச வளர்பிறைச் சதுர்த்தித் தினத்தில் நீ நீசத்துவத்தோடு இருக்கிறாய். அந்நாளில் உன்னை ஒருவரும் பார்க்கமாட்டார்கள்; விநாயகப் பெருமானுக்கு விசேட பூசனை புரிகிறார்கள்.

இந்தப் பழியொன்றுமே உனக்குப் போதாதா? இப்போது புதிய தொரு பழியும் வந்திருக்கிறது. மதியற்ற மதியே! நீ பிரம தேவரிடஞ் செல். அவர் தன் புதல்வன் தக்கனை வேண்டி இச்சாபத்தை நீக்குவார்" என்றான். சந்திரன் பிரமலோகத்தை அடைந்தான். பிரம தேவருக்குத் தன் குறையை முறையிட்டான்.

"தக்கன் சிவனை நோக்கித் தவஞ் செய்து அளவற்ற செல்வத்தைப் பெற்றவன். இன்று தனக்குச் செல்வத்தைக் கொடுத்த சிவனையே மதிக்கிறானில்லை. அவன் என் சொற்கேளான். நன்றிகெட்ட அவனிடம் நான் போகேன். நீ சிவனிடஞ் செல். அவருடைய அடிகளில் அடைக்கலம் அடை" என்றார் பிரமதேவர்.

"ஆதலி னீண்டுநின் றாதி நாயகன்
காதலின் மேயவக் கயிலை யுற்றவன்
பாதமிங் கரணெனப் பற்றி வல்லைநின்
பேதுற வொழிமதி பெருந்தண் மாமதி"

*(சந்திர சாபப்படலம் 34)*

(அரண் - பாதுகாப்பு, பேதுறவு - துன்பம்)

சந்திரன் கயிலையை அடைந்தான். தன் குறையைச் சிவனுக்கு முறையிட்டான். சிவன், "மதியே! அஞ்சற்க" என அபயமளித்தார். சந்திரனிடம் எஞ்சியிருந்த கலையை எடுத்துத் தன் தலையிற்றரித்தார். "தேய்ந்துபோன உன்னுடைய பதினைந்து கலைகளும் நாளுக்கு ஒன்றாகப் பதினைந்து நாளில் நிரம்பி, பின்பு தேய்ந்து ஒருகலை பிரியாதிருக்கும். கலைகள் வளர்வதும் தேய்வதும் எக்காலமும் இவ்வாறு நிகழும்" என்று சந்திரனுக்கு அருள்புரிந்தார். சந்திரன் சிவபெருமானுடைய பாதங்களைப் பணிந்து தன்னுலகடைந்தான்.

இந்நிகழ்ச்சியை அறிந்த தக்கன் சிவனை இகழ்ந்தான். புலகமுனிவர், "சிவனை இகழாதே, சிவனை இகழின் உன்னை அனைவரும் இகழ்வர், உன் செல்வம் அழியும். பிறர் உன்னை இகழாராயினும் உன்செல்வம் அழியாதாயினும், உனக்கு அளவற்ற வரங்களைத் தந்த இறைவனைப் பழிப்பது தகுமோ?" என வினாவினார்.



"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"

என்னுங் குறளின் பொருள் தக்கனுக்குப் புலகரால் உபதேசிக் கப்பட்டது.

"இறைவனை இகழ்ந்தவர் இகழப்படுவர்" என்பதை விநாய சதுர்த்தி ஞாபகஞ் செய்கின்றது.

தன் மனைவியரைச் சமமாக நடத்தாது, அவர்களிடையே பாகுபாடு காட்டிய சந்திரனுக்குத் தக்கன் கொடுத்த சாபத்தை முற்றாக நீக்கிச் சிவபெருமான் அருள் புரியாதமை, நடுநிலை தவறுதல் மன்னிக்க முடியாத தவறு என்பதை உணர்த்துகிறது.

சிவபெருமான் சூடிய, சந்திரனது தேயாது எஞ்சிய கலை, அவருடைய சடாமுடியில் இருந்து கொண்டே சந்திரனோடும் இருக்கிறது.

ஒருவர் எது தமக்குப் பயன்பட வேண்டுமென எண்ணு கின்றாரோ, அவர் அதைச் சிவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதைத் தெட்டத் தெளிவாக உணர்த்துகிறது சந்திரன் கதை.

அபரக்கிரியையில் இடம்பெறும் இடபதானமும் இக்கருத்துப் பற்றிச் செய்யப்படுவதேயாகும்.

இறந்தவர் செய்த தான தருமங்களை அறனுருவாகிய ஆனேற்றுக்கூடாகச் சிவெபருமானிடத்திற் சேர்த்தலே இத்தானத்தின் நோக்கம். இவ்வாறு செய்யாதபோது, இறந்தவர் தான் செய்த தான தருமங்களின் பலனைச் சுவர்க்கத்தில் அனுபவித்த பின்பு, மீண்டு பூமியிற் பிறக்க வேண்டியராவர். இவ்வாறு பிறவியுண்டாகா திருப்பதற்காவே, அவர் செய்த தான தருமங்கள் இறைவனிடஞ் சேர்க்கப்படுகின்றன.

இறந்தவர் செய்த தான தருமங்களை இறைவனிடஞ் சேர்த்தலால், அவரது செயல் இறைவனது செயலாக, அது ஆகாமிய மாகாது. ஆகாமியம் ஏறாதொழியவே பிறப்பு நீங்கி, நிலையான பேரின்பப் பெருவாழ்வு சித்திக்கும்.

அதனால் ஒரு பொருளைக் கொடுப்போர். அதைச் சிவார்ப்பணமாகக் கருதிக் கொடுக்க வேண்டுமெனவும், கொள்வோர் அதைக் சிவார்ப்பணமாகக் கருதிக் கொள்ள வேண்டுமெனவும் அறிஞர் கூறுவர்.

# தக்கயாகம்

பிரமதேவரின் மகன் தக்கப்பிரசாபதி. அவன் தனது தந்தையும் பாட்டனாகிய திருமாலும், தன்னடி பணிந்து பணிகேட்க அரசு புரிந்தவன். உலகமாதாவாகிய உமையம்மை அவனுக்குப் புதல்வியாய் சிவனை அடைவதற்குத் தவஞ்செய்தாள்.

உமைக்குஞ் சிவனுக்கும் பங்குனி உத்தர நன்னாளில் திருக்கல்யாணம் நடந்தது. தக்கன் தன் புதல்வியாகிய உமையைத் தாராதத்தம் செய்தான். மணச்சடங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, திடீரென மணமகனாகிய இறைவன் மறைந்தருளினார்.

இறைவன் மறைந்தமைக்குக் காரணம், தமது தவக்குறைவே எனக்கருதிய உலகமாதா மேலுந் தவஞ் செய்தார்.

தக்கன் தன்னை அவமதித்த இறைவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென எண்ணினான். சிவனுக்கு முதன்மை கொடுக்காமல், திருமாலை வேள்வித் தலைவராகக் கொண்டு யாகஞ் செய்தான்.

தாம் செய்த யாகம் முதலியவற்றின் பயனாகச் சுவர்க்கம் முதலிய போகங்களைச் சிவபெருமான் கொடுக்கப் பெற்றவர்கள் தேவர்கள். அவர்கள் செல்வச் செருக்கினாற் சிவனை மறந்து, சிவ நிந்தையாகிய தக்க யாகத்திற் பங்கு பற்றினார்கள்.

வீரபத்திரக் கடவுள் யாக சங்காரஞ் செய்தார். பிரமதேவர் வீரபத்திர உருத்திரரை வணங்கி, அனுக்கிரகிக்கும்படி வேண்டினார். வீரபத்திரரின் அனுக்கிரகத்தால் இறந்தவர் எழுந்தனர். தனது தலையை இழந்த தக்கன் தலையின்றியே எழுந்தான். தக்கனின் மனைவி வீரபத்திரக் கடவுளிடம் மாங்கலியப் பிச்சை கேட்டாள். வீரபத்திரர் அறுபட்டுக் கிடந்த ஆட்டுத் தலையொன்றைத் தக்கனின் உடலிற் பொருத்தி அருள் புரிந்தார்.

பிரமதேவர் தக்கனுக்கு உபதேசஞ் செய்தார். தானுந் திருமாலும் அடிமுடிதேடிய கதையைக் கூறிச் சிவபரத்துவத்தை விளக்கினார்.

"உயிர்க் கூட்டங்களெல்லாம் பரம்பொருளாகிய சிவபெருமானை உணரும் உணர்ச்சியின்றித் தம் முயற்சியால் அநாதியே தம்மைப் பற்றிய துன்பத்துக் கிறுதி கண்டு, வீடுபேறடைவோமென்று எண்ணும் எண்ணம், அருவமாகிய ஆகாயத்தின் தோலையுரித்து உடையாக உடுப்போமென்றெண்ணு வதற் கொப்பாகும். இவ்வாறு வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு வேறுசாட்சியம் வேண்டுமோ? என்றார்.



"பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்ற
லுருவமில் விசும்பிற் றோலையுரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறைபியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்று முண்டோ"

*(உபதேசப்படலம் 25)*

என்பது கச்சியப்பர் கூற்று. விசும்பு – ஆகாயம்

தக்கனுக்கு மயக்கம் நீங்கியது. தெளிவு பிறந்தது. பிரசாபதிபதவியிலுள்ள பற்று அகன்றது.

தக்கன் ஆயிரம் ஆண்டுகள் சிவபூசையாகிய தவத்தைச் செய்தான். அவனது மனத்திற் பொருந்திய அன்பைக் கண்டு சிவபெருமான் அவனுக்குக் காட்சி கொடுத்தார். தக்கன் சிவனது திருப்பாதங்களைப் புகழ்ந்து வணங்கினான்.

"அகந்தைய தாகியே யைய நின்றனை
யிகழ்ந்தன னென்கணே யெல்லை யில்பவம்
புகுந்தன வவையெலாம் போக்கி நின்னிடைத்
தகும்பரி சன்பினைத் தருதியாலென்றான்"

*(தக்கன் சிவபூசை செல்படலம் 6)*

சிவபெருமான் தக்கனுக்குச் சிவகணநாத பதவியை வழங்கி அருள் புரிந்தார். தக்கப் பிரசாபதி பரிசுத்தராயினார்.

தக்க யாகத்திற் பங்குபற்றிய தேவர்களோ நூற்றெட்டு யுக காலம் அசுரருக்கு அடிமை செய்து அலுத்தார்கள்.

"பாவஞ் செய்பவர்களை நன்கு மதிப்பவர்கள் இல்லையாயின் பாவஞ் செய்பவர்களும் இலர். ஆதலால் அவர்களை நன்கு மதிப்பவர்களே பெரும் பாவிகள்" என்பது நாவலர் இரண்டாம் பாலபாடத்திலுள்ள ஒரு வசனம்.

இவ்வசனம் கந்தபுராண நிகழ்வுக்குக் கருவாகிய தக்கயாகத்தைப் பற்றிய சிந்தனையால் உருவாகியதாகலாம்.



# சிவன் யோகத்தில் இருந்தார்

இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து சுவர்க்கலோகத்தைத் துறந்து சிவபெருமானுக்குத் தன் குறையை முறையிடுவதற்காகத் திருக்கைலாயஞ் சென்றான். அவனுக்குச் செம்பொற் றிருக்கோயிலின் திருக்கதவு திறக்கப்படவில்லை. அவன் மேருமலைக்குச் சென்று தவஞ் செய்து கொண்டிருந்தான்.

இந்திரனது தவத்தைக் கண்டு இரங்கிய சிவபெருமான் "இந்திரனே நம்மிடத்து ஒரு குமாரன் அவதரித்து, அசுரரை அழித்து உங்கள் துயர் துடைப்பான்" என அருள்புரிந்து மறைந்தருளினார்.

உமாதேவியார் மலையரசன் மகளாகித் தவஞ் செய்து கொண்டிருக்கிறார். சிவன் தட்சிணாமூர்த்தியாய்க் கல்லால மரநிழலில் வீற்றிருந்து சரியை, கிரியை, யோகங்களை உபதேசித்து, ஞானபாதத்தை உணர்த்தச் சின்முத்திரை காட்டி வீற்றிருக்கின்றார். சிவன் யோகத்தில் இருக்கிறார். உமை தவஞ் செய்கிறார். இந்நிலையில் திருக்குமாரர் அவதரிப்பதெப்படி என எண்ணிய இந்திரன் பிரமதேவரிடஞ் சென்றான், சிவபெருமான் தனக்கருள் புரிந்த சம்பவத்தை அவருக்குக் கூறினான்.

"இறைவன் யாம் செய்த தீவினையின் பயனை எமக்கூட்டித் தொலைத்து, முடிவில் முத்தி தருவதற்காகவே, சூரன் வாயிலாக நமக்குத் துன்பத்தைத் தருகிறார். நமது தீங்கெல்லாம் நீங்குங் காலம் சமீபிக்கிறது போலும். அதனாலேயே சிவபெருமான் குமாரக்கடவுளைத் தோற்றுவிப்பதாகக் கூறினார். அவர் நமக்குக் கிருபை புரிவார். ஆயினும், நாமும் அதன் பொருட்டு முயற்சிக்க வேண்டும்" என்றார் பிரமன்.

பிரமனுந் தேவர்களும் திருமாலிடம் வைகுந்தஞ் சென்றார்கள். அவருக்குக் கூறவேண்டியதைக் கூறினார்கள்.

"பிரமனே சிவன் மோன நிலையிலிருந்து நீங்கி, மலைமகளை மணம்புரியின் படைப்புத் தொழில் நிகழும். சிவகுமாரன் தோன்றிச் சூரனைக் கிளையோடு அழிப்பான். அதனால் உலகு உய்யும். இவை நிகழவேண்டுமானால் சிவனது யோகநிலை குலையவேண்டும். யோகத்தில் இருக்கும் சிவன்மீது மன்மதனை ஏவினால், அவனால் அவரது மோனநிலை நீங்கும், சிவன் உமையை மணம்புரிந்து



திருக்குமாரனைத் தோற்றுவிப்பார்" என அறிவுரை கூறினார் திருமால்.

பிரமன் தன்னகரை அடைந்தான், மன்மதனை அழைத்தான். "தம்பி தேவர்களின் துயர் துடைப்பதற்காக நீ சிவபெருமான் மீது மலர்க்கணை செலுத்த வேண்டும்" என உத்தரவிட்டான்.

மன்மதன்,

விமலன்றனையான்
எய்யும் படிசென் றிடினிவ் வுயிர்கொண்
டுய்யுந் திறமும் உளதோ உரையாய்" என்றான்.

*(காமதகனப்படலம் 22)*

பிரமன் மீண்டும் மீண்டும் சிவன்மீது பாணஞ் செலுத்தும்படி மன்மதனை வற்புறுத்தினான். மன்மதன் மீண்டும் மீண்டும் மறுத்தான். இறுதியில் பிரமனால் அழிவதை விடச் சிவனால் அழிவதே சிறந்ததென முடிவு செய்து, சிவன் மீது பாணந் தொடுத்து, அவரது பார்வையால் எரிந்து சாம்பரானான். சிவன் மீண்டும் யோகத்தில் இருந்தார்.

தேவர்கள் கயிலைக்குச் சென்று திருக்கோயிலின் முன்புள்ள கோபுர வாசலில் நின்று சிவனைத் துதித்தார்கள். சிவபெருமான் திருநந்தி தேவரைக் கொண்டு அவர்களை உள்ளே அழைப்பித்தார். தேவர்கள், "சுவாமி, பார்வதி அம்மையாரை மணந்து, திருக்குமாரரைத் தந்து அவராற் சூரனை அழிப்பித்து எமக்கு அருள்புரிக" என வேண்டினர். சிவபெருமான் அவர்கள் வேண்டியவாறே அருள்புரிந்தார். பங்குனி உத்தரநாளில் திருக்கல்யாணம் நடந்தும் திருக்குமாரன் தோன்றவில்லை.

திருமாலும் திசைமுகனும் திக்குப் பாலகரும் தேவர்களும் மேருமலையிற் கூடி, "இறைவன் இன்னும் எம்மைச் சோதிக்கிறாரே" என எண்ணியெண்ணி ஏங்கினர்.

"சிவன் விருப்பு வெறுப்பற்றவன். ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த வினைக்கேற்பக் கூடாமலுங் குறையாமலும் இன்ப துன்பங் களைக் கொடுப்பவன். நாம் தவறு செய்தவர்கள்; தவஞ் செய்யா தவர்கள். அதனால் துன்புறுகின்றோம். நமது துன்பத்துக்கு நாம் செய்த தவறே காரணம். நாம் செய்த தவறுக்காகச் சிவனை நோவது தவறு; தவறு செய்தனம் என்று எம்மை நோவதே தக்கது" எனப் பிரமதேவர் மற்றைய தேவர்களுக்குக் கூறினார்.

"இவறலும் இகலும் இன்றி யார்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைகள் நாடி அதற்படு பொருளை நல்கும்

சிவனை யாம்வெறுத்தல் குற்றம் சிறந்த நோன்பியற் றிடாதே
தவறு செய்தனம் என்றெம்மை நோவதே தக்க தென்றார்"

(திருவவதாரப்படலம் 3)

இவறல் - விருப்பு இகல் - வெறுப்பு நோன்பு - தவம்

தேவர்கள் மீண்டும் சிவனுக்குத் தமது குறையை முறையிடச்சமயம் பார்த்து வருமாறு வாயுதேவனைக் கயிலைக்கு அனுப்பினார்கள். ஆண்டவனின் நிலையை ஒற்றறிந்து அவனிடமிருந்து அருள்பெற முடியாது. வாயுதேவன் நந்தி தேவரால் அச்சுறுத்தப்பட்டுத் திரும்பினான்.

தேவர்கள், சிவனருளை உபாயத்தாற் பெறமுடியாது; பிரார்த்தனையாலேயே பெறமுடியும் என்பதை உணர்ந்தார்கள். அவன் அருள் வேண்டிக் கயிலைக்குச் சென்று, நந்தியெம் பெருமானின் அனுமதி பெற்றுச் சிவனைத் துதித்துத் திருக்குமாரரை உதிப்பிக்குமாறு வேண்டினர்.

"நீங்கள் வருந்த வேண்டாம். திருக்குமாரனைத் தருவோம்" என்று அருள் புரிந்தார் எம்பெருமான். முருகன் திருவவதாரஞ் செய்து சூரசங்காரஞ் செய்தருளினார்.



# திருக்கைலாயத்தில் சூது

திருமால் திருக்கயிலாய மலையிலுள்ள செம்பொற்றிருக் கோயிலின் முன்றிலை அடைந்தார். நந்தியெம் பெருமான் சிவனருள் பெற்றுத் திருமாலை ஆலயத்துட் செல்ல அனுமதித்தார். ஆலயத்துட் சென்று தம் திருவடிகளை வணங்கிய திருமாலை "இருப்பாயாக" என அருள்புரிந்தார் சிவபெருமான்.

சிவபெருமான் உமையை நோக்கி, "என்னோடு சூதாடுவாயாக சூதாட்டத்தில் தோற்றாயானால், நீ அணியும் ஆபணரங்கள்



அனைத்தையும் எனக்குத் தரவேண்டும். வென்றால் என்னிடத்துள்ள சந்திரன் முதலிய பல அணிகளையும் பெற்றுக்கொள்" என்றார். உமை சூதாடுவதற்கு இசைந்தார்.

சிவன் திருமாலைப் பார்த்து, "மாயவ! நீ இந்தச் சூதாட்டத்துக்குச் சாட்சியாக இருப்பாயாக" என்றார். திருமால் சூதாட்டத்துக்கு நடுவராக இருந்தார்.

சிவனைச் சூழ்ந்து நின்ற சுந்தரர் முதலிய தொண்டர்கள் சூதாடு கருவிகளையும் பலகையையும் கொண்டு வந்தனர். திருமால் சூதாடுகருவிகளை வைக்கவேண்டிய முறைப்படி வைத்தார். சிவன் உமையைத் தனக்கெதிரே இருத்தியருளினார்.

சூதாட்டம் நடைபெற்றது. சிவன் சூதில் தோல்வியடைந்தார். உமையை நோக்கிச் சிரித்தார். "உன் வல்லமை நன்றாயிருக்கிறது. நீ என்னை வெல்லவில்லை. தோல்வியடைந்தாய் முன்பு ஒட்டியபடி உனது மாலையையும் அணிகளையும் எனக்கு அளிப்பாயாக" என்றார்.

மூவுலகையும் உயிரினங்களையும் பெற்றெடுத்த பெருமாட்டி சிவனோடு வாதாடவில்லை. திருமாலை நோக்கினார். "நீயே இவ்வாட்டத்துக்கு நடுவராக இருந்தாய். ஆட்டத்தில் வென்றவர் யார்? ஓரஞ்சாராது உள்ளது மொழி" என்றார்.

திருமால், "சூதில் வெல்லுந் தகைமையுடையவர் சிவனே" என்றார். உடனே உமை கோபித்தார். நீ சொன்னது உண்மை! இது நன்று, நன்று. இங்கு நிழ்ந்ததை நீ பாராதவனல்ல, பார்த்தவன் நீ. கண்ணில்லாதவன் அல்ல, கண்ணன். நீ ஒரு பக்கஞ் சார்ந்தாய். நீ அறியாததொன்றும் இங்கு நடக்கவில்லை, நடந்தது அனைத்தையும் அறிந்தாய். இறைவன் இவ்வாறு கூறினாலும், நடுவராக இருந்த நீ, பேசக்கூடாத பொய்யைப் பேசலாமோ? நீ உடல் மாத்திரமல்ல, உள்ளமுங் கரியவன். வஞ்சகனே, நீ பாம்பாகக் கடவாய்" எனச் சாபமிட்டார். உடனே பாம்புருவந் திருமாலை அடைந்தது.

திருமால் சிவனடி பணிந்தார். எவ்வாறு எனக்கு இவ்வுருவம் நீங்குமென இறைவனைக் கேட்டு இறைஞ்சினார்.

"கண்ணா, நீ என்மீது கொண்ட அன்பினால், நான் சூதிலே வென்றதாகச் சொல்லி, இவ்வுருவத்தைப் பெற்றாய். தென்திசையில் ஆலவனம் என்னும் வனம் ஒன்று உண்டு. அங்குள்ள பெரிய ஆலமரத்திலுள்ள பொந்திலே போயிருந்து உனது குற்றம் நீங்கும்படி தவஞ்செய். நீ தவஞ் செய்யும் போது யானே தானாகும் ஆனைமுகக் கடவுள் அவ்விடத்துக்கு வருவார். அப்போது நீ அவரைத் தரிசி. அக்கணமே இந்தப்பாம்புருவம் நீங்கும்" எனச் சிவன் திருவாய்

மலர்ந்தருளினார்.

கயமுகாசுரனைச் சங்காரஞ் செய்த விநாயகப் பெருமான் ஆலவனத்தை அடைந்தார். அவரது வரவை அறிந்த திருமால், அவரை எதிர்கொண்டு வணங்கினார். விநாயக தரிசனங் கிடைத்தவுடன் பாம்புரு நீங்கத் திருமால் தனது சுயரூபத்தைப் பெற்றார், விநாயகக் கடவுளின் அருள்பெற்று அவருக்குப் பூசனை புரிந்தார்.

"தேவரீருக்கு நான் பூசனை புரிந்த இந்நாளாகிய தனு-மார்கழி-மாசத்துப்பூர்வபக்கச் சட்டித் திதியில், என்னைப் போல இனியாரும் பூசனை புரிந்தால், அவர்களது துன்பத்தைத் துடைத்து, அவர்களுக்குப் பேரின்பப் பெருவாழ்வு கொடுக்கவேண்டும்" என விநாயகரைப் பிரார்த்தித்தார் திருமால். "அவ்வாறே ஆகுக" என அருள் புரிந்தார் விநாயகப் பெருமான்.

"வின்னாமம் புகல்கின்ற திங்க டன்னின்
மிக்கமதி தனிலாறாம் பக்கமாகு
மிந்நாளில் யானுன்னை யருச்சித்திட்ட
வியற்கைபோல் யாருமினி யீறிலாவுன்
பொன்னாரு மலரடியே புகலென் றுன்னிப்
பூசைபுரிந் திடவுமவர் புன்கணெல்லா
மந்நாளே யகற்றிநீ யுலவாச் செல்வ
மளித்திடவும் வேண்டுமி தருள்கவென்றான்"

*(அனந்தன் சாபநீங்கு படலம் 4)*

வில்நாமம் – தனு, புகல் – சரண், புன்கண் – துன்பம், உலவா – அழியாத

இவ்விரதமே விநாயக சட்டி விரதமென அழைக்கப்படுகின்றது.

திருக்கயிலாயச் சூது,

"கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்"

என்னும் குறளுக்கு விளக்கம் தரும் ஒரு தெய்வீக நிகழ்ச்சியாகும்.





# அகந்தை கொண்ட வீரவாகு

முசுகுந்தன் வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தை யடைந்து, அவரை வணங்கி, "கந்த விரதத்தின் சிறப்புகளை உபதேசித்தருள்க" என்று பிரார்த்திக்க, வசிட்ட முனிவர் வெள்ளி நாள் விரதம், கார்த்திகை நட்சத்திர விரதம், சட்டிவிரதம் என்பவற்றைப் பற்றிக் கூறி அவற்றின் சிறப்புகளையும் விளக்கினார்.

வசிட்டரின் உபதேசத்தைக் கேட்ட முசுகுந்தன் "நான் இவ் விரதங்களை அநுட்டிப்பேன்" என்று சங்கற்பித்து, அவ்விரதங்களை அநுட்டித்தான்.

அதைக்கண்ட ஆறுமுகப் பெருமான், முசுகுந்தனுக்குத் திருவருள் புரியும்படி, சூரனாகிய நீலமயில் மீதேறி படைத்தலைவராகிய வீரவாகு தேவரும் இலக்கத் தெண்மரும் தேவரும் பூதகணங்களும் புடைசூழ, முசுகுந்தன் இருக்குமிடத்துக்கு எழுந்தருளினார்.

அதுகண்ட முசுகுந்தன் மனம் மிக மகிழ்ந்து, கந்தப்பெருமானது பாதங்களைப் பணிந்து கைகூப்பி வணங்கினான்.

கந்தவேள், "முசுகுந்தனே! அளவற்ற காலம் எனது விரதங்களை அனுட்டித்த நீ, எந்த வரங்களைப் பெற விரும்புகிறாய்?" என்றார்.

"என்ற காலையின் முசுமுக முடையவ னெந்தாய்
நன்று பாரெலா மெனதுசெங் கோலிடை நடப்பான்
வென்றி மொய்ப்பின னாதியாம் வீரரை யெல்லா
மொன்று கேண்மையிற் றுணைவராத் தருதியென் றுரைத்தான்"

*(கந்தவிரதப் படலம் 27)*

முசுமுகமுடையவன் – முசுகுந்தன், கேண்மை – உறவு,
வென்றிமொய்ம்பினன் – வீரவாகு

முசுகுந்தன் இவ்வாறு கேட்க, வெற்றிவேற்பெருமான் "நீ விரும்பியவாறே தருவோம்" என்றருள் புரிந்தார்.

பின்பு, கந்தவேள் வீரவாகு முதலிய சேனைத் தலைவரை நோக்கி, "முசுகுந்தன் உங்களைக் காட்டிலும் எம்மிடத்து மிகுந்த அன்புடையவன். அவன் இப்புவி முழுவதும் தன்னைத் துதிக்கும்படி அரசியற்றும் பொருட்டு, அவனுடன் சென்று ஆற்றல் மிக்க படைத் துணைவராய் இருப்பீர்களாக" என்றருளிச் செய்தார்.

முழுதருட் புரிதருங் கடவுள்சொல் வினவியே முடிவதில்லாச்
செழுமதித் தண்குடைச் சூர்குலந் தனையடுந் திறலினேங்கள்
பழிபடப் பானுவின் வழிவருஞ் சிறுமகன் பாங்க ராகி
யிழிதொழிற் புரிகிலோ மெனமறுத்துரை செய்தார் யாரும் வீரர்"

*(கந்தவிரதப்படலம் 30)*

முழுதருள் - பெருங்கருணை வினவி - கேட்டு அடுதிறல் - அழிக்கும்வலிமை பானு - சூரியன்

வீரவாகு முதலிய வீரர் கூறியதைக் கேட்ட சுப்பிரமணியப் பெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் எனது கட்டளையை மறுத்தீர்கள். அதனால் மனிதரராய், மண்ணுலகை ஆளும் மன்னவனாகிய முசுந்தன் சேனையாய், பலகாலம் அவனைப் பாதுகாத்துக் கொண்டிருங்கள். பின்பு தவஞ்செய்து நம்பக்கலில் வாருங்கள்" என்றருளிச் செய்தார்.

வீரவாகு முதலியோர் முன்னைய வன்மை நீங்கி மயக்கம் பொருந்திய மனிதர்களாய், வியர்த்து, நடுநடுங்கி, ஏங்கித்துக்கித்து "பொய்யரேம் பிழை பொறுத்தருள்தி" என்று திருமுருகன் பொற்பாதங்களை வணங்கி, முசுகுந்தச் சக்கரவர்த்தியின் சுற்றத்தவர்களாய் அவன்வழி யொழுகினார்கள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி மண்ணவர் போற்றித் துதிக்க, விண்ணக வேந்தன் வேண்ட, அவனது பகைவனை யடக்குவதற்குத் துணை புரிந்து, புகழ் விரவிய கருவூரிலிருந்து பலகாலம் அரசியற்றியபின், தன் மகனான அங்கிவன்மனுக்கு முடிசூட்டிவிட்டு, தவம்புரிந்து திருக்கைலா யத்தை அடைந்தான்.

பின்பு வீரவாகு தேவரும் இலக்கத்தெட்டு வீரர்களும் தத்தம் புதல்வர்களை யழைத்து, தமக்குரிய வரிசைகளை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை அங்கிவன்மனுடைய சுற்றமாக அவனுடன் இருத்தியபின் செயற்கரிய தவஞ் செய்தார்கள்.

"மாதவமெண் ணிலவியற்றி மானுடத்தன் மையைநீங்கி
யாதிதனி லடலெய்தி யருண்முறையா லனைவர்களும்
மேதகுசீர்க் கந்தகிரி விரைந்தேகி வேற்கடவுள்
பாதமலர் பணிந்தேத்திப் பத்திமைசெய் துற்றனரால்"

*(கந்தவிரதப்படலம் 126)*

அடல் - வலிமை

இவ்வாறு முருகப்பெருமான் மீது கொண்ட அயரா அன்போடு,



கந்தவிரத மநுட்டித்துத் தவஞ்செய்த முசுகுந்தன் போகமும் முத்தியும் பெற்றதையும், வீரமகேந்திரத்துக்குத் திருமுருகன் தூதுவனாகச் சென்றவரும், அசுரகுலத்தை அழித்த மறப்படையின் தலைவருமான வீரவாகு, அகந்தை கொண்ட காரணத்தால் மானுடனாய்ப் பிறந்ததன்பின், கந்தகிரியடைவதற்கு மீண்டும் தவஞ்செய்யவேண்டி யிருந்ததையும் எடுத்துக்காட்டி, தாழ்வெனுந் தன்மையோடு தவஞ்செய்து வாழவேண்டுமென்பதையும் நான் எனதென்னுஞ் செருக்கடக்க வேண்டியதன் இன்றியமையாமையையும் விளக்குகின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

# அன்பு செய்த அகத்தியர்

நாரத முனிவர் செய்த சூழ்ச்சியால் விந்தமலை வானளாவி வளர்ந்து நிற்க, நாள்களும் கோள்களும் வானவருஞ் செல்லும் வான்வழி தடைப்படுகின்றது. அதனால் வருந்திய அமரர்கள் விரைந்து வந்து தமது துயரைத் தீர்க்கவேண்டுமென அகத்திய முனிவரை நினைக்கிறார்கள். அதையுணர்ந்த அகத்தியர், விந்தத்தின் ஆற்றலை அடக்கி, வான்வழியைத் தொன்மை போலாக்கி அமரர்குறை தீர்க்க நினைக்கிறார்.

சிவனருள் பெற்றன்றி எதையுஞ் செய்யாத அகத்தியர், கண்ணீர் சிந்த, என்புருகி மனமுருகி மயிர் புளகங் கொண்டு சிவனைத் தியானிக்கிறார். சிவபெருமான் ஆனேற்றின் மீதேறி வந்து அகத்தியர் முன் நிற்கின்றார். அகத்தியர் எம்பெருமானை முறைப்படி வணங்கு கிறார். சிவபெருமான், "அகத்தியரே நீ விரும்பியதென்ன?" என்கின்றார்.

அகத்தியர் "விந்தமால்வரை அந்தரத்தை அடைத்துக் கொண்டு நிற்கிறது. அதன் வலியைக் கெடுக்க எனக்குச் சிறிதருள் செய்யவேண்டும்." என்கிறார். சிவபெருமான் "அகத்தியரே உனக்கு ஆற்றலை அளித்தோம். விந்தத்தை அடக்கி, அதன்பின் பொதிய மலையிற் புகுந்து, அங்கு சிறிதுகாலம் இருப்பாயாக" என்கிறார்.

சிவபெருமான் இவ்வாறருள் செய்ய, "எம்பெருமானே! தேவரீருடைய வழிபாட்டைச் செய்வதற்கு வேண்டிய நீர் கிணறுகளிலுந்

தடாகங்களிலும் எப்போதும் இருப்பதில்லை. அதனால் தென்திசைக்குக் கொண்டு செல்ல எனக்கொரு தீர்த்தத்தைத் தந்தருளுக" என்கிறார் அகத்தியர்.

உடனே சிவபெருமான் காவிரியை நினைக்கிறார். அது வருகிறது சிவன் "காவிரிப் பெண்ணே! நீ அகத்தியருடன் தென்திசைக்குச் செல்லவேண்டும்" என்கிறார்.

காவிரி,

"திண்மை ஐம்பொறி செற்றுள னாயினு
மண்ணலே யிவன் ஆண்டகை யாகுமாற்
பெண்ணி யானிவன் பின்செலல் நீதியோ!

*(அகத்தியர் படலம் 21)*

என்கிறாள்.

நீதிகேட்ட காவிரியை நோக்கி,

"திரிபில் சிந்தையன் நீதுநன் கிற்படா
வொருமை கொண்ட வுளத்தனம் மன்பருட்
பெரிய னீங்கிவன் பின்னுறச் செல்கெனா
வருள்பு ரிந்தன னால மிடற்றினான்.

*(அகத்தியப்படலம் 22)*

என்கின்றார் கச்சியப்பர்.

காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கிச் சென்ற அகத்தியர், சிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து, தனது கையைப் பிரமலோகம் வரையும் நீட்டி, தனது வழியைத் தடைசெய்த விந்த மலையின் உச்சியில் தன் அகங்கையை வைத்தூன்றி, அதை அடக்கிப் பூமியின் கீழ்ப் புகும்படி செய்கின்றார். இந்நிகழ்ச்சியால் அகத்தியர் கன்ம மூலமாகிய விருப்பு வெறுப்பற்றவர் என்பதையும், ஐம்புல வேடரினீங்கியவர், அவனருளின்றி எதையுஞ் செய்யாதவர் என்பதையும் எடுத்துக் காட்டிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அவரைக் குடக நாட்டுக்கு அழைத்துச் செல்கின்றார்.

அகத்தியர், தனது வழியிற் குறுக்கிட்ட கிரவுஞ்சன் என்னும் அசுரனை அடக்கி, அவனை மலையாகும்படி சபித்துவிட்டுக் குடக நாட்டுக்குச் செல்கின்றார். அவரைக் கண்ட வில்வலன் அருந்தவ முனிவரைப் போல வஞ்சகவடிவங் கொண்டு வந்து, அகத்திய முனிவரை வணங்கி, "யானும் முனிவர் தம் நிலை பெற்றேன். அடிகணீர் போத இந்நாள் அருந்தவம் புரிந்தேன்" என்று கூறி, அவரைத் தன்



ஆச்சிரமத்துக்கு வரும்படி அழைக்கிறான்.

வில்வலனின் அழைப்பை ஏற்ற அகத்தியர்,

"ஆறெதி ரெண்ம ராகு மாயிர முனிவர் தம்பால்
வேறுள தவத்தர் தம்பான் மிக்கநின் னியற்கை தன்னிற்
கூறுசெய் யணுவின் காறுங் குணமில சரத மீது
தேறுதி யிருக்கை யேது செல்லுதும் வருக" என்றான்

*(வில்வலன் வாதாவிவதைப் படலம் 7)*

என்கிறார் கச்சியப்பர்.

ஆறெதிர் எண்மராகும் ஆயிரம் – நாற்பத்தெண்ணாயிரம்,

சரதம் – உண்மை

இவ்வாறு கூறிய அகத்தியர் முக்காலமும் உணரவல்லவர். அவர் வில்வலன் கொண்ட தவவேடத்தை நோக்காது, வேடதாரியாகிய அவனையும் அவனியல்பையும் நோக்கியிருந்தால், அவனது சூழ்ச்சியை அறிந்து, அக்கணமே அவனை வதஞ் செய்திருப்பார். அவர் வேடதாரியை நோக்காது வேடத்தை நோக்கிய காரணத்தால், வில்வலனைப்புகழ்ந்து அவனுடைய இருப்பிடத்துக்குச் செல்வதற்கிணங்கி அவனுடன் செல்கின்றார். இந்நிகழ்ச்சி மூலம் அகத்தியரின் அன்பரொடு மருவுந் தன்மையையும் திருவேடத்தைப் போற்றுமியல்பையும் எடுத்துக் காட்டுகிறார் கச்சியப்பர்.

வில்வலனையும் வாதாவியையும் வதஞ் செய்தபின், கொங்கு நாட்டுக்குச் சென்று, தம்மைத் தொடர்ந்த பிரமகத்தி தோஷம் நீங்கும் பொருட்டுச் சிவபூசை செய்த அகத்தியர், அதன்பின்பும் சிலநாள் அங்கிருந்து சிவபூசை செய்கிறார்.

அந்நாளில் ஒருநாள், காகவடிவோடு வந்து அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, காவிரியைத் தென்னாட்டில் ஓடச் செய்து, அவருக்குத் தன்னுருவைக்காட்டி, "வேண்டிய வரங்கள் ஈதுங் கேண்மதி விரைவின்" என்கின்றார் விநாயகப் பெருமான்.

"நின்பா லினுமந் நெடுமா லுணரான்
தன்பா லினுமே தமியேன் மிகவு
மன்பா வதொர்தன் மையளித் தருணீ
யின்பா லதுவெஃ குவனெனப் பொழுதும்"

*(காவிரி நீங்குபடலம் 52)*

என்கிறார் அகத்தியர்.

வெஃகுவன் – விரும்புவேன்

இதனால் அகத்தியர் அரன்மீது கொண்ட அயரா அன்பினை எடுத்துக் காட்டிய கச்சியப்பர், அவரை திருக்குற்றாலத்திலுள்ள திருப்பெருமுற்றத்துக்கு அழைத்துச் செல்கின்றார்.

திருப்பெருமுற்றத்தில் அச்சுதன் ஆலயமொன்றிருக்கிறது. அங்கிருக்கும் எண்ணற்ற அந்தணர்கள், உண்மை நூல்களை யுணர்ந்திருந்தும், அஞ்ஞானத்தால் தஞ்சமயமே மேலான சமயமென் றெண்ணி, சிவனடியார்களைக் காணிற் சினந்து சீறி, அவர்களை நெடுநாட் பகைவரைப் போலக் கருதி, அவர்களது முகத்தையும் பாராது, துன்மார்க்கர்களாய், வெறுமனே வேதியர்கள் என்ற பெயர் தாங்கி, தமது சமய வொழுக்கத்தையுங் கைவிட்டிருப்பதை அகத்தியர் அறிந்து கொண்டு அவ்வாலயத்தின் முன் வருகிறார்.

அங்கிருந்த வைணவர்கள் அவரைக் கண்டு கோபித்து "நீ அணியத் தகாத உருத்திராக்கத்தையும் விபூதியையும் அணிந்திருக்கிறாய், ஊரறியப் பிச்சையெடுத்த சிவனுக்கடிமையாவாய், அதனால் இங்கே வருதல் கூடாது என்கின்றார்கள்.

அகத்தியர் சிரித்து, "வேதநெறியை வெறுத்தொழுகும் நீங்கள் இங்கிருப்பதை நானறியவில்லை. நான் செல்லவேண்டிய வழி இவ்வழியாதலால் இங்கு வந்தேன். உங்களைப்பற்றி முன்னரே அறிந்திருந்தால் இங்குவர நினைத்திருக்கவும் மாட்டேன். கோபிக்காதீர்கள். நான் திரும்பிச் செல்கின்றேன்" என்கிறார்.

வைணவர்கள், "நீ இவ்விடத்துக்கு வருவதும் பாவம், திரும்பிப் போ" என்கின்றார்கள்.

"நீங்கள் கூறியதுண்மை. பெரியோர் சொன்ன நூன்முறையும் இதுவாகும்" என்று கூறித் தக்கனின் வழியில் வந்த அவ்வந்தணர்களை விட்டு நீங்கிச் செல்கின்றார் அகத்தியர். மெய்நெறியாகிய சிவநெறியை இகழ்ந்து தஞ்சமய வொழுக்கத்தையுங் கைவிட்ட அவர்களை அடக்குவதே முறையெனக் கருதிய அவர், பாகவத வடிவங் கொண்டு மீண்டும் அங்கே வருகிறார். அந்தணர்கள் அவரை அடிபணிந்து வரவேற்கிறார்கள்.

அகத்தியர் "நான் அழகர் மலையிலிருந்து வருகிறேன். இப்போது அத்திகிரிக்குச் செல்கின்றேன். நம்பெருமானுறையுங் கோயிலொன் றிங்கிருப்பதாக அறிகிறேன். அம்மூர்த்தியை வழிபடும் விருப்புடையேன்" என்கின்றார். வைணவர்கள் "உதுதான் திருமால் எழுந்தருளியி ருக்குங் கோயில்" என்று அதைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அகத்தியர் கைகூப்பி வணங்கி, அங்கிருந்தவர்களுடன் ஆலயத்தை வலம் வந்து, திருமாலின் திருவடிகளை வணங்கித் துதித்து,



தம் பக்கத்திலிருந்த அடியார்களைப் பார்த்து "இவரை வழிபட விரும்புகிறேன். திருமஞ்சனம் முதலியவற்றைக் கொண்டு வாருங்கள்" என்கிறார்.

அவர்களுட் சிலர் திரு மஞ்சனமும் மலரும் மணங்கமழுஞ் செஞ்சாந்தும் பூந்துகிலும் பிறவுங் கொண்டு வந்து முனிவர் முன் வைக்கிறார்கள். முனிவர் அவர்களைப் பார்த்து, "இன்று யாம் இம்மூர்த்தியைப் பூசிக்கின்ற முறையைப் பாருங்கள்" என்று கூறி,

"அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம் பெருமானை யகத்துட் கொண்டு
சிறுகுமுரு வுடையமுனி நாரணனார் திருமுடிமேற் செங்கை யோச்சிக்
குறுகுகுறு கெனவிருத்தி யொள்ளரக்கிற் புனைபாவைக் கோல மீது
மறுகுதழ லுற்றென்னக் குழைவித்தோர் சிவலிங்க வடிவஞ் செய்தார்"

*(திருக்குற்றாலப்படலம் 115)*

ஓச்சி – வைத்து, இருத்தி – அமர்த்தி, அரக்கு – மெழுகு, மறுகுதழல் – கடுந்தீ, குழைவித்து – நெகிழச்செய்து.

இவ்வாறு செய்த அகத்தியர் தனது சுயரூபத்தை யெடுத்து மந்திரங்களைக் கூறி, பூசைத் திரவியங்களைத் தூய்மைப்படுத்தி பூசை செய்வதைக் கண்ட அவ்வந்தணர்கள் கோபித்து "மாயஞ் செய்யவல்ல இவனைப் பிடியுங்கள்" என்று கூறி அகத்தியரைச் சூழ்ந்து கொள் கிறார்கள்.

அகத்தியர் அவர்களைத் தீப்பொறி பறக்க நோக்குகிறார். ஆலகால விடஞ் செல்வதைப் போலச் சென்ற அவரது கோபாக்கினி, அவரைச் சூழ்ந்து நின்றோரைச் சூழ்ந்து, மேலும் மேலும் தீப்பொறிகளை யுண்டாக்கி அவர்களைத் துரத்துகிறது. அந்தணர்கள் அவ்விடத்தை விட்டுச் சிதறியோடுகிறார்கள்.

அதன் பின்பு "இவ்வாலயம் இன்று முதல் சிவாலயமாகும்" என அறிவித்த அகத்தியர், அங்கெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைப் பணிந்து அவரருள் பெற்றுத் தென்திசை நோக்கிச் சென்று, பொதிய மலையை அடைந்து, சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்து மெய்த்தவஞ் செய்து கொண்டிருக்கிறார்.

இவ்வரலாற்றால், ஆலயத்தை அரனெனத் தொழுவதும் அகத்தியரின் வழக்க மென்பதை யெடுத்துக்காட்டி, "எச்சமய த்தவராயினும் தஞ்சமய நூன் முறைப்படி யொழுகி, பிறமதங்களை நிந்தியாதிருப்பாராயின் அவரையடக்குவது பாவம். தஞ்சமய வொழுக்கத்தையுங் கைவிட்டு மெய்ச்சமயத்தை இகழ்வோரை யடக்குவது நீதி" என்னும் ஆன்றோர் ஆசாரத்தையும் எடுத்துக்காட்டிய

கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அகத்தியரை ஒஷதிப்பிரஸ்தத்துக்கு அழைத்துச் செல்கின்றார்.

பங்குனி யுத்தர நன்னாள். மலையரசன் திருநகராகிய ஒஷதிப் பிரஸ்தம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அந்நகரைக் கண்டவிண் ணவர்கள், விண்ணுலகும் தம்மோடு இந்நகரில் இறங்கியதோ என்றையு றுகிறார்கள்.

சிவபெருமான் மணங்கமழும் மலர்மாலைகளால் அலங்கரிக் கப்பட்ட திருமண மண்டபத்தில், இந்திர நீலங் கொண்டியற்றிய சிங்காச னத்தில் மணக்கோலங் கொண்டு வீற்றிருக்கிறார்.

உலகமாதாவாகிய உமையம்மையை எம்பெருமான் மணந்தருளுந் தூய திருமணக் காட்சியைக் காணும் பொருட்டு எல்லாப் புவனங்களிலிருந்து வந்தவர்களும் அங்கு கூடியிருக்கிறார்கள். இமயமலை அப்பாரத்தைத் தாங்க முடியாமல் வருந்தி நடுங்குகிறது. ஆதிசேடனாற் சுமக்கப்படுகின்ற இந்தப்பூமி, ஒரு தராசின் இரண்டு தட்டுக்களைப் போலாகி, பழுமிகுந்த வடபகுதி தாழத்தென்பகுதி உயருகின்றது. அதைக்கண்டு பயந்த மனிதரும் தேவரும் முனிவரும் "சிவனே" என்று ஓலமிடுகிறார்கள்.

அதையறிந்த சிவபெருமான் திருநந்தி தேவரைத் திருநோக்கஞ் செய்து, சமுத்திரத்தை ஒரு கரத்தில் அடக்கியுண்ட அகத்தியரை அழைத்து வரும்படி பணிக்கிறார்.

நந்தியெம் பெருமான் அழைக்க அங்குவந்த அகத்தியர் மன்றிலாடுந் திருவடிகளை வணங்குகிறார்.

சிவபெருமான் குறுமுனியை நோக்கி, "எல்லோரும் இங்கு வந்ததால் பூமியின் வடபாகந் தாழுகின்றது. நீ தென்பொதிய மலைக்குச் சென்று அங்கு இருப்பாயானால், பூமி முன்போலச் சமநிலையில் நிற்கும். அதனால் நீ தென்னாட்டுக்குச் செல்" என்று அருள்புரிகிறார்.

"குறை யொன்றியான் செய்துளனோ கொடியேனை ஈண்டே
உறை யென்றிலை சேணிடைச்செல் லவுரைத்தி யெந்தாய்"

*(திருக்கல்யாணப் படலம் 54)*

என்கின்றார் அகத்தியர்.

சிவன் அகத்தியரை நோக்கி "உன்னைப் போன்ற முனிவர்கள் உலகத்தில் இல்லை. பிரமனும் உனக்கு நிகராகான். நீ நினைத்ததைச் செய்ய வல்லவன். உன்னாற்றான் இச்செயலைச் செய்யமுடியும். அதனால் நீ தென்பாண்டி நாட்டுக்குச் செல்" என்கிறார்.

அகத்தியர் "நீலமேனி நெடுமாலிருக்க, இந்திரனிருக்க,



பிரமனிருக்க, இச்செயலைச் செய்யும்படி என்னையே பணித்தருளினீர். அதனால், நான் செய்த தவமே தவம். ஆனாலும், தேவரீருடைய தெய்வீகத் திருமணக் காட்சியைக் கண்டு வணங்காமற் போகவேண்டி யிருக்கிறதே யென்றெண்ண என்மனம் வருந்துகின்றது" என்கிறார்.

சிவபெருமான் "முனிவனே! மனம் வருந்தாதே. நாம் பொதிய மலைக்கு வந்து எமது திருமணக்கோலத்தைக் காட்டுவோம். அதைக் காண்பாயாக. அங்கு எம்மையே நினைத்துக்கொண்டு சில நாளி ருந்து பின்பு எம்பக்கத்தில் வருவாயாக" என்கிறார்.

அகத்தியர் எம்பெருமான் திருவடிகளைப் பன்முறை பணிந்து, பிரிவாற்றாமையாற் பெருமூச்சு விட்டு, மனத்தை ஒருவாறு ஒருப்படுத்திக் கொண்டு தென்திசை நோக்கி விரைகிறார்.

"கிற்புறு மாயைவல்ல கிரவுஞ்ச வரையும் விந்த
வெற்பதும் வன்மைசிந்த வில்வல னொடுவாதாவி
கற்பனை யகன்று மாயக் காவிரி நீத்தத் தோடு
முற்பகல் படர்ந்ததென்ன முனிவரன் தென்பாற்போனான்"

*(திருக்கல்யாணப்படலம் 61)*

என்கின்றார் கச்சியப்பர். கற்பனை – சூழ்ச்சி

பொதிய மலையை அடைந்த அகத்தியர் திரிபுர சங்கார காலத்தில் சிவபெருமான் கொண்ட திருவுருவைத் தியானித்துக் கொண்டி ருக்கிறார். பூமியின் வடபகுதியும் தென்பகுதியும் சமநிலைக்கு வருகின்றன.

இமயமலைக்குச் சென்றிருந்த முனிவர்களுந் தேவர்களும் சிவபெருமானது அளப்பரிய பேரருட்டிறத்தையும் அவரது திருவடிகளை முறைப்படி வழிபடும் அடியவர் பெருமையையும் வியந்து துதிக்கிறார்கள். இவ்வாறாகத் தமிழ் முனிவர் அகத்தியரின் திருக்கதையை எடுத்தியம்பி, அவரைச் சித்தராகவும் சீவன் முத்தராகவும் எமக்குக் காட்டுகிறார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

# பிரமோபதேசம்

முனிவர்களும் தேவர்களும் உபப்பிரமர்களாகிய புதல்வர்களும் இரு மருங்கும் நின்று போற்றிசெய்ய, சத்திய உலகத்திலுள்ள தனது மண்டபத்தில் பிரமா வீற்றிருந்தார். அப்பொழுது அவருடைய புதல்வர்களுட் சிறந்தவனும் அறிஞனுமாகிய தக்கன் என்போன், முற்பிறவிகளிற் செய்த தவவிசேடங் காரணமாகத் தன் பிதாவாகிய பிரமாவை நோக்கி, "தேவர்களின் தலைவராய் ஞான முதல்வராய் மும்மூர்த்திகளில் உயர்ந்தவராய் முடிவிலாதவராய் ஒருவராய் எல்லாவுயிர்களுக்கும் உயிராய் அவற்றைவிட்டு நீங்காதவராயிருக்கும் முதற்கடவுள் இவரென்றறியுமாறு தெளிவாகக் கூறியருள்க" என்றான்.

பிரமா : மகனே, நல்லது. உனது வினாவுக்கு விடை கூறுகின்றேன். கேட்பாயாக. அன்று நாரணனும் நானும் அமர்செய்தபோது, எமக்கிடையே அக்கினி வடிவாய் எழுந்து வான்மேற் சென்ற தெது? அதைச் சிந்தித்துப் பார். அந்தச் சிவபெருமானே யார்க்கும் மேலானவர். தக்கனே, இதை நீ தெளிவாகத் தெரிந்து கொள்.

தக்கன்: படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களில், படைத்தல் காத்தலாகிய செயற்கருஞ் செயல்களைச் செய்யும் பிரம விட்ணு க்களாகிய உங்களுக்குத் தலைமையின்றாக, இறுதிக் கண்ணதாகிய சங்காரத் தொழிலைச் செய்யும் உருத்திர மூர்த்தி உங்கள் இருவருக்கும் தலைவராகிய காரணம் என்னை? இதற்குரிய விடையைத் தெளிவாகக் கூறியருள்வீராக.

பிரமா : மகனே! நீ வேதங்களைக் கசடறக் கற்று, அவை கூறும் பொருளைத் தெரிந்தவாறு நன்று, நன்று. சங்கார காலத்தில் அனைத்தையுஞ் சங்கரிக்கும் உருத்திரரைத் தலைமைக் கடவுள் எனக் கூறுவது ஏன் என்று கேட்கிறாய். தக்கா, பிரம விட்ணு க்களாகிய எங்களை, இந்திரன் முதலிய இமை யவரை, மற்றைய உயிர்களை எல்லாஞ் சங்கரித் தருள்பவர் அவ்வுருத்திரரே. அதனால் ஆரம்பத்தில் அனைத்தையுஞ் சிருஷ்டித்தவர் அவ்வுருத்திரரே யாவர்.

சங்காரகாலத்தில் தான் ஒருவரேயாய் படைப்புக்கா லத்தில் தோற்றியவாறே அனைத்தையும் ஒடுக்கி நிலை பெறச் செய்து, எல்லாவுயிர்களுக்கும் அன்னையும் அத்தனுமாய்,



அவ்வுயிர்களின் வினைக்கீடாக உடம்பு முதலியவற்றை உண்டாக்குபவர் சிவபெருமானன்றோ! அவருடைய செயல னைத்தையும் இத்தகையது என்று இயம்புதல்கூடுமோ? செங்கண்மாலையும் பிரமாவாகிய என்னையுந் தனது புயங்களிலிருந்து தோற்றுவித்து, காத்தற் றொழிலையும், படைத்தற் றொழிலையும் எமக்குத் தந்து, எம்மை விட்டு நீங்கா தெம்மோ டிருப்போமென்று கூறி, எமதுயிர்குயிராய் நின்று எமது தொழில்களாகிய படைத்தல் காத்தல்களைச் சிவபெருமானே செய்கின்றார். அவரின்றி எம்மால் எதையுஞ் செய்ய முடியாது.

எவ்வுலகத்தையுங் காத்தருளுஞ் சிவபெருமான் எமதுயி ர்க்குயிராயிருந்து எமது தொழில்களைச் செய்விப்பது மாத்திரமின்றி, எமது சிந்தையோடுங் கண்ணோடுங் கலந்து நின்று, நாம் சிந்திப்பதற்கும், காண்பதற்கும் இன்றியமையா தவராகின்றார். நாம் முக்குணவயத்தால் மயங்கும் போது, எம்மிடத்தில் வந்தருள் புரிகின்றார். இவ்வாறு முத்தொழி லுக்கும் முதல்வனாயிருக்கும் உருத்திர மூர்த்தி, சங்காரத் தொழிலை மாத்திரம் செய்பவர் போல எமது வரிசையிலும் வைத்தெண்ணப் படுகின்றார்.

சிவன் எள்ளில் எண்ணெய் போலவும், அடிக்கப்படும் மணி யில் எழும் ஓசைபோலவும், மலரில் மணம்போலவும், இரத்தின த்திற் பொருந்திய ஒளிபோலவும் உலகெங்கும் உள்ளும் புறமும் வியாபித்து ஒன்றுபட்டு நிற்கின்றார்.

முன்னாளில் வேதம் முதலிய கலைகளனைத்தையும் ஓதியவர் அவர். அப்பரம்பொருள் உபதேசிக்கவே நாம் அவற்றை அறிந்தோம். இவ்வுண்மையை நீ அவ்வேதங்களிற் காண்பாயாக. தக்கனே! நீ அப்பரம் பொருளையும் எம்மையும் சமமாகக் கருதுகின்றாய். நீ பெரிதும் பேதையாயினை.

தக்கன் : சிவபெருமான் அருளிய வேதம் உயிர்களையும் பஞ்சபூதங் களையும் எவற்றையும் பிரமமென்றுகூறுவதென்னை? நான் பிரமநிச்சயம் செய்ய முடியாது மனம் வருந்துகின்றேன். பிதாவே, எனது ஐயத்தை அகற்றுவீராக.

பிரமா : வேதம் சிவனால் அருளப்பட்டது; ஓர்ந்துணர வேண்டியது. அதன் பொருள் எல்லோராலும் அறிய முடியாதது. ஆயினும் அதனை இயன்றவரை கூறுகின்றேன். கவனமாகக் கேட்பாயாக.

வேதங்களிற் கூறப்படும் 'சிவமே பரப்பிரமம்' என்னுங் கூற்றே உண்மையானது. சிவனையொழிந்த எவரையும் எவற்றையும் பிரமம் என்று கூறுங் கூற்றுக்கள் யாவும் உபசார வார்த்தைகள். வேதவழக்கு உண்மையாகவும் உபசார மாகவும் இருப்பதால், சிவனல்லாத மற்றைய தேவர்களுக்கும் ஆன்மாக்களுக்கும் ஐந்து பூதங்களுக்கும் உயர்வு கூறுதல் முகமனாகும். ஒரு பொருளைப் புகழ வேண்டுமானால், அதை அதன் நிலையிலும் பார்க்க உயர்த்திக் கூறுவது வழக்கம். வேதமுணர்ந்த பிராமணர்களையும் பிரமாக்கள் என்றன்றோ சிலர் கூறுகின்றார்கள்.

எந்த ஒரு பொருளை எவர் வணங்கினாலும் அவ்வணக்கம் சிவபெருமானையே சென்றடைவது போலவும், நதிகளெல் லாஞ் சென்று கடலையடைவது போலவும், வேதங்கள் புகழும் புகழனைத்துஞ் சிவபெருமனானையே சென்றடையும். மகனே! இன்னுங் கேட்பாயாக. வேதசாகைகள் அனைத்தும், படைத்துக் காத்து ஒடுக்கி, ஒடுக்கியவாறே மீண்டும் படைப்ப வரும் உயிர்களுக்கு அருள்புரிந்து ஆட்கொள்ளும் தலை வரும் ஆதியந்த மில்லாதவருஞ் சிவபெருமானே யென்று ஆணையிட்டுக் கூறுகின்றன.

பரமபிதாவும் முற்றறிவுடைமை, வரம்பிலின்பமுடைமை, இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, தன்வயமுடைமை என்னும் ஆறு குணங்களையுடையவரும், அருவம் உருவம் அருவுருவமாகும் அத்தனும், அறிதற்கரிய சோதியும் எங்கும் வியாபித்திருக் கின்ற சித்துப் பொருளும் அநாதியானவனும் தேவதேவனும் என்றுமுள்ள நித்தியப் பொருளும், உயிர்க்குயிராய் அவற்றை விட்டு நீங்காது நின்று பஞ்ச கிருத்திய நடனஞ் செய்வோனும், அந்தச் சிவனேயென்று வேதசாகைகள் முழங்கும்.

மூவுலகங்களிலுந் தோன்றும் பொருள்கள் அனைத் தையும் படைத்து அவற்றுக் கருள்புரியுந் திரியம்பகனும், எல்லோர் க்கும் சாட்சியாய் நிற்கின்றோனும், அழிவற்றவனும் மேலான வனும், தனக்கொப்பாரும் மிக்காருமில்லாச் சிரேட்டனும், பெருமையிற் சிறந்தோனும், ஏகனும், அளப்பரிய குணமுடை யவனும், ஆண் பெண் அலி என்னும் தன்மையில்லாதவனும், வேண்டுவார் வேண்டுவதை ஈவோனும், பிரமா முதலிய உயிர்க்கூட்டம் அனைத்து க்கும் பதியாய் அருள்புரிகின்ற பழைமையாகிய பசுபதியும், பிரமா முதலியோர்க்கு மேலானவ



ரென்றுயாவருந்தெரிந்துணருமாறு அப்பிரமனாதியர் இறக்க அவர்களுடைய உடம்பாலான சாம்பரையும், எலும்பையும் புனைந்தவரும், பிறவியுட் புகும் எவர்களையுந் தனது சிறந்த குணத்துக்குள்ளே ஒடுங்கச் செய்து, தானே யாவருக்கும் புகலிடமாக நிலைபெற்று, பிறப்பெடுத்த உயிர்களின் மாயா குணங்களோடு தான் கலத்தல் இல்லாதவனும் அவனுடைய இயல்பிதென்று என்னாற் கூறமுடியாதவனும் ஈசனுஞ் சிவனேயென்று அவ்வேத சாகைகள் கூறும்.

இவற்றைவிட இன்னொன்று கூறுகின்றேன் கேள். ஒருவர் முத்தியடைய வேண்டின் அம்முத்தியைத் தரவல்லர் பிரமன் முதலிய தேவரல்லவென எம்மை யெல்லாம் விலக்கி, சிவனே முத்திதரவல்லவன் என்றும் வேதங் கூறுகின்றது. இக்காரணங்களால் முதற் கடவுளாவார் யாரென நீயே அறிந்து கொள்.

உயிர்க்க கூட்டங்கள் சிவனையுணரும் உணர்ச்சியின்றி, தம்மைப் பொருந்திய பிறவித் துன்பத்துக் கிறுதி கண்டு வீடுபேறடைவோ மென்றெண்ணு வது வீண். அவ்வெண்ணம் உருவற்ற ஆகாயத்தின் தோலையுரித் துடுக்க வெண்ணு வது போன்றதென வேதங்கூறுகின்றது. வேதக்கருத்திவ்வா றிருத்தலால் சிவனே பரம்பொருள் என்பதற்கு வேறு சாட்சியும் வேண்டுமோ?

சிவபரம்பொருளைப் பற்றிக் கூறும் வேதவுண்மைகள் இன்னும் பலவுண்டு. அவற்றை எல்லாம் கூற வேதத்துக் குரிய என்னாலும் முடியாது. அவற்றை ஒருவாறு கூறத் தொடங்குவேனானாலும் அதைக் கூறி முடிப்பதற்குப் பலகாலஞ் செல்லும். பலகாலங் கூறினாலும் பரம்பொருளைப் பற்றிய மெய்மை முற்றுப்பெறாது. நீ இவற்றையெல்லாம் என்னிடங் கேட்டறிந்தாயானாலும் இப்பொழுது மயங்கு கிறாய். திருமாலையும், பிரமாவாகிய என்னையும், இந்திரன் முதலிய தேவர்களையும் புகழுகின்ற வேதம் சிவபெரு மானைத் துதிப்பது போல, எம்மைத் துதித்தொரு வார்த்தை யாவது கூறியிருக்கின்றதா? வேதம் எம்மைப் புகழ்ந்திருந்தால் அது முகமனாகக் கூறியதேயாகும்.

நான்கு வேதங்களில், தனக்கொப்பில்லாத பாகமாகிய பாதிவேதம் கங்காதரனாகிய சிவபெருமானது பரத்துவத் தைக் கூறும். மறுபாதி எம்மையும் ஏனைய தேவர்களையும் பஞ்சபூதங்களையும் பூதகாரியங்களையும் பற்றிக் கூறும்.

இவ்வாறு கூறுதல் பாரபட்சமானதல்ல. தக்கனே! இவ்வு ண்மையை உணரக் கடவாய்.

எம்மைப் பரம்பொருளென்று கருதி, சிவனுக்குச் சிறப்புச் செய்வது போல எமக்குச் சிறப்புச் செய்யுங் கொடியோர் நீங்காத் துன்பத்தைத் தருங்கொடுநரகில் விழுவார்கள். அவர்களை அந்நரகம் கரையேற்றாது. சிவனையும் எம்மையும் சமனென்று கூறுவோர் தம்மையேயன்றி எம்மையும் துன்பப் பெருங்கடலில் வீழ்த்துவர்.

சிவபெருமானுக் கன்பரென்றும், அவருக்குத் தொண்டு செய்து வாழ்பவரென்றுங் கருதி எம்மை வணங்குபவர்க ளுக்கு நாம் அவர்கள் விரும்பியதை அருள்வோம். இவ்வா றெண்ணாதவர்கள் எமக்குப் பகைவராவார்.

சிவனேபதி. மும்மலமாகிய பாசத்தாற் பிணிப்புண்ட நாமெல்லாம் பசுக்கள். வேதங்கள் உடன்பாட்டு வாக்கியங் களாற் கூறுமிவ் வுண்மையைத் தெளிய வேண்டுமானால், பிரம விட்டுணு க்களாகிய நாம் படைப்புத் தொழிலையுங் காத்தற் றொழிலையுஞ் செய்யும் பொருட்டு, அவனது திருவடி களை அர்ச்சித்துத் துதிக்கின்ற ஆலயங்கள் பலவற்றையும் பார்.

அவனருள் பெறாது முத்தியடைந்தவர் இல்லை. அவனரு ளின்றி வாழும் அமரருமில்லை. அவனருளால் அடைய முடியாத பொருளில்லை. அவனின்றி முதல்வ ரென்றெவரு மில்லை. இது சத்தியம். ஆதலால் நீ அவனை அடைவாயாக.

இவ்வாறாக பிரமோபதேசத்தின் மூலம், சைவசித்தாந்தங் கூறும். பதியியல்பைக் கூறுகின்றார் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள்.





# திருக்கை வேல்

பழந்தமிழர் அம்பு, வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களைப் போருக்குப் பயன்படுத்தினர் என்பதைத் தமிழிலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

பொன்முடியார் என்னும் புறநானூற்றுப் புலவர்,

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

*(புறம்312)*

என்று பாடினார்.

அவர் இப்பாடலில் வாளைப் பற்றியும் கூறிய போதிலும், வாள் செய்து கொடுக்க வேண்டியது கொல்லனது கடனென்றோ, வாளால் வெட்டிக் களிற்றைக் கொல்ல வேண்டியது காளைக்குக் கடனென்றோ கூறாமல், வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனென்றும் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனென்றுங் கூறியதன் மூலம் வேலைச் சிறப்பித்துக் காட்டியிருக்கிறார்.

செங்கோன்மை பற்றிக் கூறிய திருவள்ளுவர்,

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்"

என்னுங் குறளில் மன்னனது படைப்பலம் அனைத்தையுங் குறிப்பிடுவதற்கு, 'வேல்' என்னுஞ் சொல்லை உபயோகித்திருக்கிறார்.

ஒரு அரசனுக்குப் போரில் வெற்றியீட்டிக் கொடுப்பது அவனது படைப்பலமல்ல, அவனது கோடாத செங்கோல் என்பது இக்குறளின் பொருள்.

கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள், கந்தன் கரத்திலிருக்கும் வில்லையும் மற்றைய ஆயுதங்களையும் போற்றாது, “திருக்கைவேல் போற்றி போற்றி” என்று வேலையே போற்றியிருக்கிறார்.

இக்காரணங்களால் சான்றோராகிய புலவர்கள், மற்றைய ஆயுதங்களிலும் பார்க்க வேலையே சிறந்த ஆயுதமாகக் கருதினார்கள் என்பதை உணரமுடிகின்றது. வேல் சிறந்த ஆயுதமாகக் கருதப்பட்ட போதிலும், கந்தனது கரத்தில் வீற்றிருக்கும் காரணத்தால், அவனது கைவேல், மற்றைய வேல்களிலும் பார்க்கச் சிறப்புடையதாகக் கருதப்பட்டு, ‘திருக்கைவேல்’ எனச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. அவ்வேலைப் பற்றிக் கச்சியப்பர் கூறுவதை நோக்குவோம்.

கந்தனை ஈன்று புறந்தந்த தாயும் சான்றோனாக்கிய தந்தையுமாகிய சிவனிடம், பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் சென்று, “பற்றியெரியும் நெருப்பின் மேல் நித்திரை செய்யவேண்டுமா? நன்றாக நித்திரை செய்யலாம், பாற்கடலிற் றோன்றிய கொடிய நஞ்சை உண்ண வேண்டுமா, அதையும் உண்ணலாம். ஆனால், எமது பகைவர் எம்மை வருத்த, அதனால் எமக்கு வரும்துன்பத்தைப் பொறுக்க முடியாது. நாம் படுகின்ற துன்பம் போதும்; போதும்” என்று கூறித் தம் குறையை முறையிட்டார்கள். அவர்களது முறையீட்டை,

“ஏற்றெழு வன்னிமேல் இனிது துஞ்சலாந்
தோற்றிய வெவ்விட மெனினுந் துய்க்கலாம்
மாற்றலர் அலைத்திட வந்த வெந்துயர்
ஆற்றரி தாற்றரி தலம்இப் புன்மையே”

*(விடைபெறுபடலம்31)*

என்று கூறுகின்றார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

அலம்-போதும்

தேவர் தம் குறையை முறையிட்டதைக் கேட்ட சிவபெருமான் பதினொரு உருத்திரரையும் அழைத்து, அவர்களைத் தோமரம், கொடி, வாள், வச்சிரம், அம்பு, அங்குசம், மணி, தாமரைப்பூ, தண்டு, வில், மழு என்னும் பதினொரு படைகளாக்கி அவற்றைக் குமாரக் கடவுளிடம் கொடுத்தார்.



“ஆயதற் பின்னர் ஏவில் மூதண்டத் தைப்பெரும் பூதமும் அடுவ
தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்ப தேவர்மேல் விடுகினும் அவர்தம்
மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயிர் உண்பதெப்படைக்கும்
நாயகமாவ தொருதனிச் சுடர்வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்.”

*(விடைபெறு படலம்38)*

பதினொரு படைகளையும் குமாரக் கடவுளிடங் கொடுத்த சிவபெருமான், வேல் வடித்துக் கொடுக்கும் கொல்லனுமாகி, தன்னை ஏவினால், பழமையான அண்டங்களிலுள்ள ஐம்பெரும் பூதங்களையும் அழிக்கவல்லதும் அவ்வண்டங்களில் வாழும் உயிர்கள் பலவற்றையும் முடிக்க வல்லதும் எந்தவீரர் மேல் விட்டாலும் அவரது வரங்களையும் வன்மையையுஞ் சிந்தி உயிர் குடிக்கவல்லதும் எப்படைகளுக்குந் தலைமையானது மாகிய வேற்படையை ஆக்கி, அதனையுங் குமாரனிடங் கொடுத்தார்.

அதன்பின் சிவபெருமான் நன்னடை நல்கும் வேந்தனாகி, துணைப்படையாக இலக்கத்தொன்பது வீரரையும் மனோவேகப் பொற்றேரையும் கொடுத்து, “சூரனை அவுணர் குழுவொடும் அழித்து, இந்திரனுக்கு விண்ணரசைக் கொடுத்து, வேத நெறியை நிறுவ ஏகுதி போருக்கு” என்ன, மூவிரு சமயத்தின் முதல்வியாகிய உமையம்மை, “அவுணர் தம் கிளையை அழித்து, கடவுளர் குறையை முடித்து வருதி” என்றருள் புரிந்தாள்.

தந்தை தாயாரின் ஆசியைப் பெற்ற வேலவன், இலக்கத்தொன்பது வீரரும் இரண்டாயிரம் வெள்ளம் பூதரும் புடைசூழத் தென்திசை நோக்கிச் சென்று தாரகாசுரன் வாழும் மாயாபுரியை அடைகின்றான். அங்கு நிகழ்ந்த போரில் வீரவாகு முதலிய வீரர்கள், மாயப்போர் புரிந்த தாரகனைத் தொடந்து, கிரவுஞ்ச மலையிலிருந்த புழை வழிகளூடாகச் சென்று, அம்மலை மயக்க அங்கே மயங்கிக் கிடக்கின்றார்கள்.

இச்செய்தியை நாரதமுனிவர் முருகனுக்குத் தெரிவிக்கின்றார். முருகன், தாரகனைக் கொன்று, கிரவுஞ்ச கிரியை அழித்து, அங்கே மயங்கிக் கிடக்கும் வீரர்களை மீட்டுவருமாறு வேலுக்குக் கட்டளையிடுகின்றான். வேல் தன் தலைவனிட்ட பணியைச் செய்யச் செல்கின்றது. அது செல்லுங் காட்சியைக் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்,

“அரண்டரு கழற்கால் ஐயன் அறுமுகத் தெழுந்த சீற்றம்
திரண்டொரு வடிவின் வேறாய்ச் சென்றதே யெனவு நான்கு
முரண்டரு தடந்தோள் அண்ணல் முத்தலை படைத்த சூலம்
இரண்டொரு படையாய் வந்த தென்னவும் ஏகிற் றவ்வேல்”

*(தாரகன் வதைப்படலம்182)* என்று கூறுகின்றார்.

ஆறுமுகப் பெருமானது கழலடிகள் அடைக்கலமடைந்தோரைத் தாங்கும் திருவடிகள். அவன் பகைவரை அழிக்கத் திருவுளங் கொள்ளும்போது, அவனது ஆறு முகங்களிலும் சீற்றமுண்டாவது போற்றோன்றும். அவ்வாறு முகங்களிலுந் தோன்றிய சீற்றமெல்லாம் ஒன்று திரண்டு ஓருருப் பெற்றுச் சென்றது போலவும், நான்கு பெரிய திருத்தோள்களையுடைய சிவபெருமானது திருக்கரத்திலிருக்கும் மூவிலை கொண்ட சூலம் இரண்டொரு படையாய் வந்தது போலவும் அவ்வேல் தாரகனையுங் கிரவுஞ்ச கிரியையும் நோக்கிச் சென்ற தென்பது இதன் பொருள்.

அவ்வாறு சென்றவேல் களிறெறிந்து பெயரவேண்டிய காளையாகிய கந்தனது கட்டளையை நிறைவேற்றுவதற்காக, ஆனைமுகங் கொண்ட தாரகனை அழித்துக் கிரவுஞ்ச கிரியைப் பொடிசெய்தது.

இச்செய்யுளிற் கூறப்படும் "முத்தலை படைத்த சூலம் இரண்டொரு படையாய் வந்ததென்னவும் ஏகிற்றவ்வேல்" என்னும் பகுதியைப் படிப்போர், வேல் முத்தலை படைத்த சூலம் இரண்டின் வலியைப் பெற்றுச் சென்றதோ, முத்தலை படைத்த சூலங்கள் இரண்டின் தலைகளும் தண்டுகளும் தலையோடு தலையும் தண்டோடு தண்டுஞ் சேர்ந்து செல்வது போலச் சென்றதோ, சூலங்கள் இரண்டினதும் தண்டுகள் ஒன்றாகித் தலைகள் ஒன்றாகாமல் இருபக்கத்திலும் ஒன்றுக் கொன்று எதிராகப் பொருந்திச் சென்றதோ என்னும் வினாவை வினவலாம். இவ்வினாக்களுக்கு அவ்வேலைக் கண்டவர்களே சரியான விடை கூறமுடியும்.

அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை நோக்குவோம். போர்க்களத்திலே முருகனுக்கு எதிரணியில் நின்றவர்களில் முக்கியமான ஒருவன் சிங்கமுகாசுரன். அமரில் அவனுடைய ஆயிரந்தலைகளில் ஒன்றைத் தவிர மற்றைய தலைகளனைத்தும், இரண்டாயிரங்கரங்களில் இரண்டைத்தவிர மற்றைய கரங்களனைத்தும் அறுக்கப்பட்டு விட்டன. அந்நிலையிலும் அவன் முருகப்பெருமானைப் பார்த்து;

"இருதலை யயில் வேலண்ண லிற்றன சிரந்தோ ளென்றே
கருதலையென் பேராற்றல் கழுவுளர் யாருந் தேர்வ
ரொருதலை யிருகை கொண்டே யுலகெலாந் தொலைப்பன்..."

*(சிங்கமுகாசுரன் வதைபடலம்450)*

என்கிறான்.



அவன் முருகப் பெருமானை விளிப்பதற்கு உபயோகித்த சொற்றொடர்களில் இடம்பெறும், 'இருதலை யயில் வேல்' என்பது முருகப் பெருமானது வேலின் சிறப்பியல்பை விளக்குகின்றது. முருகனது கைவேல் இரண்டு பக்கங்களிலும் அயில்களை உடையது. இனி, முருகனின் அணியைச் சேர்ந்தவர்களின் கூற்றாகத் திருக்கை வேலை நோக்குவோம்.

மூன்றாம் நாட் போரின்போது பானுகோபன் மாயப் படையை ஏவுகின்றான். அது வீரவாகு முதலிய வீரர்களின் அறிவை மயக்கி, அவர்களைக் கொண்டுபோய் நன்னீர்க் கடலில் வைத்திருக்கின்றது. இந்நிகழ்ச்சியை இந்திரன் முதலிய இமையவர் வாயிலாக வறிந்த முருகப் பெருமான், வேற்படையை நோக்கி வீரவாகு முதலிய வீரர்களை மீட்டு வருமாறு கூறுகின்றார்.

வேற்படை விரைந்து சென்று வீராகு முதலிய வீரர்களின் மயக்கத்தை நீக்குகின்றது. மயக்கம் நீங்கிய வீரர்கள், மிகுந்த மகிழ்ச்சியோடு அவ்வேற்படையை நோக்கி, "முருகப் பெருமான் பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு ஒவற விமைக்கும் சேண்விளங்கவி ரொளியுடையவன். வேலாகிய நீயும் பேரொளி யுடையவன். முருகனுக்கு ஆறுதிருமுகங்கள் உண்டு. உனக்கு ஆறு தலைகள் உண்டு. ஆறுமுகப்பெருமான் எம்பெருமானாகிய சிவபெருமானது திருவிழிக ளிலிருந்து தோன்றியவன். நீயுஞ் சிவனிடத்திற் றோன்றியவன். புலவர்கள் முருகனைச் சிவனுடைய சக்தியென்று போற்றிப் புகழுகின்றார்கள். அவர்கள் உன்னையுஞ் சக்தியென்றே கூறுகின்றார்கள். அதனால் உன்னைக் காணும் போது எமக்குக் கந்தனைக் கண்டது போன்ற உணர்ச்சி உண்டாகின்றது. எமது மனக்கவலை மாறி விட்டது." எனக் கூறி வேலைப் போற்றுகின்றார்கள்.

அந்நிகழ்ச்சியை;

" அந்தமி லொளியின் சீரா லறுமுகம் படைத்த பண்பா
லெந்தை கணின்றும் வந்த வியற்கையாற் சத்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்".

*(மூன்றாம் நாட் பானுகோபன் யுத்தப்படலம்212)*

எனப் பாடுகின்றார் கச்சியப்பர்.

தொடர்ந்து வீரவாகுதேவர்,

"குன்றிடை யெம்மை வீட்டிக் கொடியவன் புணர்ப்புச் செய்த
வன்றும் வந்துணர்வு நல்கி யளித்தனை யதுவுமல்லா

லின்றும் வந்தெம்மை யாண்டா யாதலின் யாங்க ளுய்ந்தே
முன்றனக் குதவுங் கைமா றுண்டுகொ லுலகத் தென்றான்"

*(மூன்றாம் நாட் பானுகோபன் யுத்தப்படலம்214)*

எனக் கூறுகிறார்.

குன்று-கிரவுஞ்சகிரி, புணர்ப்பு-சூழ்ச்சி

வீரவாகுவின் கூற்றைக் கேட்ட வேற்படை,

"...நீயிர்கள் விளிந்த தன்மை நேடியே நிமலனென்னை
யேயின னதனால் வந்தேன்..."

*(மூன்றாம் நாட் பானுகோபன் யுத்தப்படலம்215)*

எனப் பதிலளிக்கிறது. இதனால் முருகன் அருள்வழி நின்று செயற்படுவதே வேலின் சிறப்பியல்பென்பது புலப்படுகின்றது.

யுத்தக்களத்திற் சூரபன்மன் மாயப்போர் செய்யக் கருதி இருள் வடிவங் கொண்டு நிற்கின்றான். அதைக் கண்டு பயந்த தேவர்கள்;

நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணு தற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணு தற் பெருமா னல்கும் கடவுளே யோல மோலம்."

*(சூரபன்மன் வதைப்படலம்460)*

எனவும் இன்னும் பலவாறாகவும் முருகப் பெருமானைத் தோத்திரஞ் செய்து, சூரபன்மனைச் சங்கரிக்கும்படி வேண்டினார்கள். முருகப்பெருமான் அவர்களுடைய வேண்டுதலுக்கு இரங்கி, தன்னுடைய திருக்கரத்தால் வேற்படையைத் தொட்டார்.

இருதலை படைத்த அவ்வேற்படை ஆயிரங்கோடி சூரியர் உதித்தாற் போன்ற பேரொளியோடு விளங்கி, தீச்சுவாலைகளை உண்டாக்கிக் கொண்டு சென்றது. வேல் சென்றதும் அவுணன் கொண்ட இருளுருவம் முற்றாக அழிந்தொழிந்தது.

வேற்படை தொடர்ந்தது. அது, நிர்மலராகிய சிவபெருமான் தனது கண்டத்திற் தாங்கிய விடத்தைப் பிடித்து, நெற்றிக் கண்ணிலுள்ள தீயிற் காய்ச்சி, இடக்கரத்தில் ஏந்திய நெருப்பிற் தோய்த்துச் செய்ததே போன்று, கண்டோர் அஞ்சும்படியான பயங்கர வடிவத்துடன் சென்று, வேறெவருக்கும் எவ்வித தீங்கும் செய்யாது, கொடியோனாகிய சூரன் கொண்ட மாமர வடிவத்தை அடியோடு அழித்தது.



வேற்படை சூரபன்மனைச் சங்கரித்த நிகழ்ச்சியை,

"விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்து முன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவி னேகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே"

*(சூரபன்மன் வதைபடலம்487)*

என்கிறார் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள்.

உடம்பிடி-வேல்

மேற்கூறியவாறு, பல்வேறு உவமைகளை எடுத்துக் காட்டியும் வேறுவிதமாகவும் வேற்படையின் வடிவையும் வலுவையும் விளக்க முயன்ற கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள், அதன் வலியை விளக்க முடியாதவராகி,

"வேதனையகத் தராகும் விண்ணவர் படைகடம்முள்
யாதனையிதற்கு நேரா வியம்புவ தெரியிற் றோன்றிப்
பூதனையுயிருண் கள்வன் புண்டரீகத்தன் வன்மை
சோதனை புரிந்த மேலோன் குலமே என்பதல்லால்"

*(சூரபன்மன் வதைப்படலம்484)*

என்பாராகில் மற்றையோர் வேலின் வலியை விளங்குவதெப்படி?

கந்த வெற்பில் குறமகள் வள்ளியும் தெய்வயானையும் இருமருங்கும் வீற்றிருக்க, அவர்களுக்கும் அருள்புரிந்து கொண்டிருந்த திருமுருகன் முன்னிலையில்,

"சேவலும் கொடிமான் றேரும் சிறைமணி மயிலுந் தொன்னாண்
மேவருந் தகரும் வேலும் வேறுளபடைகள் யாவு
மூவிரு முகத்து வள்ளல் மொழிந்திடு பணிக ளாற்றிக்
கோவிலின் மருங்கு முன்னுங் குறுகிவீற் றிருந்த மன்னோ"

*(வள்ளியம்மை திருமணப்படலம்260)*

என வேலைப் பற்றிப் பொதுவாகக் கூறிய கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள், தொடர்ந்து "வெற்பைக் கூறுசெய் தனிவேல் வாழ்க" என வேலை வாழ்த்தியும், வேல் சேர்ந்த செங்கைக் குமரன், வேற்றனி நாயகன் என்னுஞ் சொற்றொடர்களை, வேல் குமரனது செங்கையிற் சேர்ந்திருப்பதும் முருகன் வேலுக்குத் தலைவனாய் இருப்பதும்

அவனுக்குப் பெருமை தருவதாகும் எனப் பொருள் கொள்ளக் கூடிய விதமாகவும் உபயோகித்து வேலின் சிறப்பை விளக்கியுள்ளார். வேற்படை வாழ்க.

“கல்லகங் குடைந்த செவ்வேற் கந்தனோர் தருவதாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட்டன்ப
ரெல்லவர் தமக்கு முத்தி யிருங்கனி யுதவு மென்றும்”.

முருகன் திருவடி வாழ்க.